விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 05 திங்கட்கிழமை (20.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 214

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-9913)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## தேர்தல் சம்பந்தமாக தமிழ் மக்கள் பேரவை தமிழ் மக்களிடம் முன்வைக்கும் 5 கோரிக்கைகள்

(யாழ்ப்பாணம்)

நாம் வாக்களிக்கத் தவறின் விலைபோன வாக்குகளே எமது பிரதிநிதிகளைத் தீர்மானிக்கும் துர்ப்பாக்கியம் அரங்கேறிவிடும் எனவும் தேர்தலிலே சரியான, நேர்மையான, விலைபோகாத பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதில் எமது முழுக் கவனத்தை யும் குவிப்போம்.

இதற்காக எமது மூன்று விருப்பு வாக்குகளையும் தவறாது பதிவிடுவோம் எனவும் தேர்தல் சம்பந்தமாக தமிழ்மக்கள்பேரவை தமிழ் மக்களிடம் 5 கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

23

### தபால்மூலம் வாக்களிக்கத் தவறியவர்கள்

## இன்றும் நாளையும் வாக்களிக்க முடியும்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்பு கடந்த வாரம் நிறைவு பெற்றிருந்த நிலையில், அப்போது வாக்களிக்க

23

### சட்டவிரோத மீன்பிடிக்கு எதிராக

## ஒரு வாரம் தொழிலுக்கு செல்லாது வடமராட்சி மீனவர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

கடலட்டை பிடித்தல் உள்ளிட்ட சட்டத்துக்கு புறம்பான மீன்பிடிக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளமை மற்றும் அவற்றைத் தடுக்க கடற்றொழில் அமைச்சர், அதிகாரிகள் தவறியமையைக் கண்டித்து வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத்துக்கு உட்பட்ட மீனவர்கள்தொழில் புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதன்மூலம் நேற்று

23

### பிரபாகரன் ஆயுதத்தால் பெற முயற்சித்த நாட்டை

# பேனாவால் எழுதிக் கொடுக்க நாம் ஒருபோதும் தயாரில்லை

## பிரதமர் மகிந்த வீராப்பு



(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆயுதத்தால் பெற முயற்சித்த நாட்டை பேனாவால் எழுதிக் கொடுக்க நாங்கள் தயார் இல்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

(23ஆம் பக்கம் பார்க்க)



### சாவகச்சேரிப் பகுதியில்

## இளைஞனின் சடலம் மீட்பு

(கொடிகாமம்)

தென்மராட்சி - சாவகச்சேரி மடத்தடிப் பகுதியில் நேற்றுக் காலை இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இராசேந்திரன் நிருஜன் (வயது - 25) என்ற இளைஞரே இவ்வாறு வீட்டு அறையிலிருந்து சடல

23

### வீட்டிலிருந்து

## யுவதியின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தடியில் யுவதி ஒருவர் நேற்று முன்தினமிரவு வீட்டிலிருந்து

23

### தேர்தல் தொடர்பில்

## பெரமுன மீதே அதிக குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவிற்கு எதிரான தேர்தல் வன்முறைகளே அதிகளவில் பதிவாகியுள்ளதை

23

## சுகாதார வழிகாட்டல்களை மீறினால் 6 மாத சிறை

### சட்டத்தரணிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

பொதுத் தேர்தல் தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய வர்த்தமானியின் அறிவுறுத்தல்களை மீறுபவர்களுக்கு எதிராக ஆறு மாத காலம் வரை சிறைத் தண்டனை

23

## தமிழர்கள் விரும்பும் தீர்வை எமது ஆட்சியில் வழங்குவேன்

### சஜித் பிரேமதாஸ உறுதி

(கொழும்பு)

நாம் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்கள் விரும்புகின்ற அரசியல் தீர்வை வழங்கியே தீருவோம். ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றியடையா விட்டாலும் எனக்கு இலட்சக் கணக்

23




## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### புதிய அரசாங்கம் வந்த நாள் முதல்

# எவ்வித அபிவிருத்தியும் இல்லை கொரோனா மாத்திரமே மிச்சம்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



(திருகோணமலை)

**இந்த அரசாங்கம் வந்த நாள் முதல் எந்த அபிவிருத்தியும் இடம்பெறவில்லை. ஏற்பட்டிருப்பது கோவிட் - 19 மாத்திரமே. இதனால் பொருளாதாரமும் மிகவும் கீழ்தரமாக நழிவடைந்துள்ளது என முள்ளாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

திருகோணமலை மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து கிண்ணியாவில் "கிண்ணியா விசன் மண்டபத்தில் வேட்பாளர் றோகினா மகரூப் தலைமையில் நேற்று தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது.இதில் ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில்:

இன்று அரசாங்கம் கொரோனாவை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளதாக கூறுகின்றனர். உலக சுகாதார ஸ்தாபனம் சொல்கிறது கொரோனா 2வது அலையும் தொடங்கி விட்டது என்று. இத்தாலி நாட்டவர்கள் சொல்கிறார்கள் இந்த கொரோனாவின் 2வது அலை நவம்பர் மாதம் வரை இருக்கும் என்றும் இலட்சத்திற்கு அதிகமானோர இறப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளார்கள்.

எம்மால் சரியாக சொல்ல முடியாது முதலாவது கொரோனா அலை, இரண்டாவது அலை வருமா என்பதை எமது நாட்டிற்கு இரண்டாவது கோவிட் - 19 வரும் அது தேர்தலுக்கு முன்பு வருமா, பின்பு வருமா என்று உறுதியாக கூற முடியாது உள்ளது. இன்று அரசாங்கம் சொல்லுகிறது இந்த கொரோனா பீதியை நாங்கள் ஏற்படுத்துகிறோம் என்கிறார்கள்.

அதே அரசாங்கம் மீண்டும் சொல்லுகிறது தொடங்கப்பட இருந்த பாடசாலைகள் மீண்டும் பிற்போடப்பட்டுள்ளது என்கிறார்கள். கொரோனா பற்றி பயமில்லா விட்டால் ஏன் பாடசாலைகளை மூட வேண்டும். உலகில் இந்த கொரோனா பற்றி முன்னோக்கி கூற பல நிபுணர்கள் குழு இருக்கிறார்கள்.

நாட்டில் சுகாதாரத்தை பறி கொடுத்தாவது இத் தேர்தலை முன்னெடுத்துச் செல்வதற்கே அரசாங்கம் விரும்புகிறது. அதன் பிற்பாடு ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு எந்த ஆயத்தமும் இவர்களிடம் இல்லை.கொரோனாவை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தால் மீண்டும் பொருளாதாரம் வீழ்ச்சி காணும். அதன் பின் நாம் என்ன செய்வது.

நாம் மீண்டும் எப்போது விவசாயம் செய்வது, அப்போது கொரோனா வந்தால் கடலுக்கு போக முடியுமா, எல்லா இடங்களிலும் கடைகளை மூடுவார்கள், எல்லா தொழிற் சாலைகளும் மூடப்படும். கொழும்பில் வேலை வாய்ப்புகளில் உள்ளவர்கள் வேலை வாய்ப்புகளை இழப்பார்கள்.இன்று வரை 5 இலட்சத்திற்கு அதிகமானோர் வேலை வாய்ப்புகளை இழந்துள்ளனர். தற்போது அதற்காக எடுக்கப்பட்ட சலுகைகள் தான் என்ன?

நான் இதற்கு முன்பு கூறி இருந்தேன் நாளொன்றுக்கு ஐயாயிரம் பேருக்கு PCR பரிசோதனை செய்ய வேண்டும் என்று. இதுவரை ஒரு இலட்சம் பேருக்கு மாத்திரமே PCR பரிசோதனை மேற் கொள்ளப்பட்டுள்ளது. குறைந்த பட்சம் 5 இலட்சம் பேருக்கு PCR பரிசோதனை செய்யப் பட்டிருக்க வேண்டும்.

இப்போது எமக்கு தேவை இருக்கின்ற சுகாதார சேவைகளை மேலும் விருத்தி செய்ய வேண்டும். கொரோனா முழு நாட்டிலிருந்தும் அழிக்கப்பட வேண்டும். இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்ப அந்த விடயத்தை தான் நான் தினமும் கூறி வருகின்றேன் என்றார் .

(ஞா)

# காட்டு யானை தாக்கியதில் விரிவுரையாளர் படுகாயம்

## கிளிநொச்சியில் சம்பவம்

(முறுகண்டி)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள தொழில்நுட்ப பீடத்தின் பெண் விரிவுரையாளர் ஒருவர், காட்டு யானை தாக்கியதில் படுகாயமடைந்துள்ளார்.

அவர் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம் பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரை காட்டு யானை தாக்கியுள்ளதாக தெரிவித்த பொலிஸார் விசாரணைகள் இடம்பெறுவதாக குறிப்பிட்டனர்.

தொழில்நுட்ப பீடத்தின் விரிவுரையாளரான தென்னிலங்கையைச் சேர்ந்த அவர், விகாரையில் வழிபாட்டில் ஈடுபட்டு விட்டு விடுதிக்கு திரும்பிய வேளை காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். (ஞா-100)

# நவாலிப் பகுதியில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவாலிப் பகுதியில் வாள் வெட்டுக்குழுவைச் சேர்ந்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நவாலிப் பகுதியில் நேற்று இரவு வாள் வெட்டுக் குழுவைச் சேர்ந்த நபர்கள் ஆயுதங்களுடன் சுற்றித் திரிவதாக மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சுற்றி வளைப்பினை மேற்கொண்ட பொலிஸார் வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த இருவரைக் கைது செய்ததுடன் அவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியுள்ளனர்

இதில் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய நபரும் சங்கானைப் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய நபரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஏனையோரை தேடிவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஞா-32)

# வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சை அலகுத் திறப்பு விழா



(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சை அலகு மற்றும் இசை நூலகத் திறப்பு விழா மருதனார்மடத்தில் அமைந்துள்ள மேற்படி சபையின் வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. வட இலங்கை சங்கீத சபையின் தலைவரும், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய செ.சந்திரராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வட மாகாணக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

எதிர்காலத்தில் பரீட்சைகளை வினைத்திறனுடன் நடத்தவும், நுண்கலைத் துறைசார் பட்ட மேற்படிப்புக்களை இதர உயர்கல்வி நிறுவகங்களுடன் இணைந்து மேற்கொள்ளவும் பரீட்சை அலகின் புதிய கட்டமைப்பு வழிவகுக்கும் என கருத்துரைக்கப்பட்டது.

வட இலங்கை சங்கீத சபை தற்போது நாடளாவிய ரீதியிலும், வெளிநாடுகளிலும் பரீட்சைகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ஞா)

# 80 லீற்றர் கசிப்புடன் இரண்டு பேர் கைது

## புதுக்குடியிருப்பு பகுதியில் சம்பவம்

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பேராறு கள்ளியடி காட்டுப்பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை இடம்பெற்று வருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நேற்று முன்தினம் இரவு ஜ.பி. பண்டார தலைமையிலான, பி.எஸ். ரத்தினசிறி, பி.சி.திஸநாயக்க, பி.சி.கமகே, பி.சி .அனுரட்ட, பி.சி.றத்னாயக்க ஆகியோர் கொண்ட குழுவினர் கள்ளியடி ஆற்றுப்பகுதிக்கு சென்றபோது பெருமளவாக உற்பத்தி செய்யப்பட்ட கசிப்பு முகவர்களுக்கு விற்பனைக்கு தயாரான நிலையில் பொலித்தீன் பைகளில் 10 லீற்றராக கட்டப்பட்ட 8 பைகள் மற்றும் உந்துருளியுடன் இருவரை கைது செய்துள்ளார்கள்.

இவர்களை நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது கசிப்பு விற்பனை செய்வதாக ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். இதன்போது இவர்களை நீதிமன்றம் பிணையில் விடுவித்துள்ளதுடன் இவர்கள் மீதான வழக்கினை நாளை செவ்வாய்க்கிழமை மன்றில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஞா - 281)

# தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் உருவாக்கப்படவில்லை

## விஜயதாஸ சுட்டிக்காட்டு

(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்களும் வெளிநாடுகளும் விரும்பிய விதத்திலேயே காணாமல்போனவர்கள் குறித்த அலுவலகம் உருவாக்கப்பட்டதேயன்றி, தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக உருவாக்கப்படவில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "தற்போது முன்னைய அரசாங்கம் ஆரம்பித்த காணாமல்போனவர்கள் குறித்த அலுவலகமே காணப்படுகின்றது.

அந்த அலுவலகத்துக்கு நல்லிணக்க உத்தியோகத்தர் என ஒருவர் நியமிக்கப்பட்டார். அதற்காக அரசாங்கம் பில்லியன் ரூபாய்களை செலவிட்டது. ஆனால் எந்த நல்லிணக்கமும் ஏற்படவில்லை.



காணாமற்போனவர்கள் குறித்த அலுவலகம் நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் காரணமாகவே நாங்கள் அதனை கடுமையாக விமர்சிக்கின்றோம். அது சர்வதேச சமூகத்தினாலும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளாலும் உருவாக்கப்பட்டது.

அவர்கள் விரும்பிய விதத்திலேயே காணாமல்போனவர்கள் குறித்த அலுவலகம் உருவாக்கப்பட்டது. புலம்பெயர்ந்த தமிழர்களை தொடர்ந்தும் பேணுவதற்காகவே காணாமற்போனவர்கள் குறித்த அலுவலகம் உருவாக்கப்பட்டது. தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக உருவாக்கப்படவில்லை.

எங்களால் உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு எங்கள் புரிந்துணர்வின் மூலம் உதவமுடியும்.

காணாமற்போனவர்கள் அலுவலகம் குறித்து இதுவரையில் அரசாங்கம் எந்த முடிவையும் எடுக்கவில்லை. புதிய அரசாங்கம் உருவானதும் என்ன கொள்கைகள் முன்னெடுக்கப்படும் என என்னால் தெரிவிக்க முடியாது" என மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# உயர்தரம்,புலமைப்பரிசில் பரீட்சைக்கான புதிய திகதிகள் இன்று அறிவிக்கப்படும்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை என்பவற்றுக்கான புதிய திகதிகள் இன்று அறிவிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் காரணமாக மார்ச் மாதம் முதல் கல்வி நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

இதனால் உயர்தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை என்பவற்றை ஒத்தி வைப்பதற்கு கல்வி அமைச்சு ஏற்கனவே தீர்மானித்திருந்தது.

அதற்கமைய கடந்த ஜூன் மாதம் 9 ஆம் திகதி பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்தும் பரீட்சைகள் தொடர்பிலும் கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டது.

இதன்போது க.பொ.த உயர்தரப்பரீட்சைகளை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கும் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையினை செப்டெம்பர் 13 ஆம் திகதி நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.


எனினும் உயர்தர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கமைய உயர்தர பரீட்சைகளை ஆரம்பிப்பதற்காக தினம் குறித்து ஆராய்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்தது.

இந்நிலையில் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்ட சுமுகமற்ற நிலைமையைக் கருத்திற் கொண்டு மீண்டும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கும் சுகதாரத்துறையினருக்கும் இடம்பெற்ற பரந்துபட்ட கலந்துரையாடலில் பாடசாலைகளுக்கு மேலும் ஒரு வார காலம் விடுமுறை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு இன்று உயர்தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான புதிய தினங்களை அறிவிக்க தீர்மானிக்கப்பட்டது. (ஜ-4)

# சர்வதேச ஒப்பந்தங்களில் இருந்து விலகுவது எளிமையான காரியமல்ல

## பிரதமர் விடாப்பிடி



(கொழும்பு)

சர்வதேச ஒப்பந்தங்களில் இருந்து விலகுவது எளிமையான காரியமல்ல. தாரைவார்க்கப்பட்டுள்ள தேசிய வளங்களை எதிர்கால சந்ததியினருக்காக மீட்டெடுப்பதற்கான முயற்சியை ஒருபோதும் கைவிடமாட்டேன் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மகியங்கனை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாடுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களில் இருந்து விலகுவது எளிமையான காரியமல்ல. உரிய வழிமுறைகளை எவ்வித முரண்பாடுகளும் இல்லாத விதத்தில் முன்னெடுக்க வேண்டும். ஒப்பந்தத்தினால் தாரை வார்க்கப்பட்டுள்ள தேசிய வளங்களை மீட்டு அதனை எதிர்கால தலைமுறையினருக்கு பொறுப்பாக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம்.

தேசிய உற்பத்திகளுக்கு முன்னுரிமை வழங்கி விவசாய பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் பலமாக முன்னெடுக்கப்படும். எமது நாட்டின் பாரம்பரிய உற்பத்திகளை சர்வதேசத்தில் அடையாளப்படுத்த வேண்டுமாயின் தேசிய உற்பத்திகள் முன்னேற்றமடைய வேண்டும்.


கொவிட்- 19 வைரஸ் தாக்கத்தை முறையாக வெற்றி கொண்டுள்ளோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முப்படையிரை கொவிட்-19 வைரஸ் ஒழிப்பிற்கும் மக்களின் பாதுகாப்பிற்கும் ஈடுபடுத்தினார். இதன் காரணமாகவே குறுகிய காலத்தில் இந்த வெற்றியை எம்மால் பெறமுடிந்தது.

கொவிட்-19 வைரஸ் பரவல் ஏற்படுவதற்கு முன்னரே ஜனாதிபதி பாதுகாப்பு தொடர்பான விசேட செயலணியை அமைத்து முற்பாதுகாப்பு நடவடிக்கைளை முன்னெடுத்தார். தூர நோக்க சிந்தனைகளினால் பாரிய சவாலை எம்மால் வெற்றி கொள்ள முடிந்துள்ளது.

இடம் பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அமோக ஆதரவை வழங்கினார்கள். மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை நிறைவேற்றப்பட வேண்டுமாயின் பலமான பாராளுமன்றம் ஜனாதிபதியை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியால் தோற்றம் பெற வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஜ-4)



# எம்.சி.சி.யில் இருந்து விலகிக்கொள்வதற்கு 2/3 பெரும்பான்மை அவசியமில்லை



## விஜித ஹேரத் சுட்டிக்காட்டு

(கொழும்பு)
அமெரிக் காவுடனான எம்.சி.சி.உடன்படிக்கையில் இருந்து இலங்கை விலகிக் கொள்வதற்கு 2/3 பெரும் பான்மை அவசியமில்லை யென தேசிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டி யுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரி விக்கும்போதே அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் விஜித ஹேரத் மேலும் கூறி யுள்ளதாவது,

"எம்.சி.சி. உடன்.படிக்கை யில், கடந்த அரசாங்கம் கைச் சாத்திட்டுள்ளதாக தற்போ தைய ஆட்சியிலுள்ள அமைச் சர்கள் சிலர் கூறி வருகி ன்றனர்.

இந்த அமைச்சர்கள் முற் றிலும் உண்மைக்கு புறம்பான தகவல்களையே வெளியிட்டு வருகின்றனர்.


மேலும் இந்த உடன்படிக் கைக்காக இலங்கைக்கு அமெ ரிக்காவினால் விதிக்கப் பட்டுள்ள நிபந்தனைகள், மிக வும் பாரதூரமானவை ஆகும்" என அவர் தெரிவித்துள் ளார். (ஜ-4)

# கிழக்கு முனையத்தில் கொள்கலன்களை கையாளும் பணியை இந்தியாவின் அழுத்தத்தால் ஆரம்பிக்க முடியவில்லை

## துறைமுக அதிகார சபைத்தலைவர் வெளிப்படுத்தல்

**(கொழும்பு)**

**இந்திய அரசின் அழுத்தங்கள் காரணமாகவே கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தில் கொள்கலன்களை கையாளும் பணிகளை ஆரம்பிக்க முடியாமல் இருப்பதாக துறைமுக அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**



துறைமுக அதிகார சபை யின் தொழிற்சங்க பிரதிநிதிக ளுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தை யின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

இந்தியாவின் அழுத்தங்கள் காரணமாக பணிகளை ஆரம் பிக்க முடியாமல் இருப்பதாகவும் இது தொடர்பாக தீர்மானம் ஒன்றை எடுக்க தனக்கு கால அவகாசத்தை வழங்குமாறும் தயா ரத்நாயக்க தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள தொழிற்சங்க பிரதிநிதிகள், எதிர்காலத்தில் தாம் கடுமை யான தொழிற்சங்க நடவடிக் கையில் ஈடுபட நேரிடும் என எச்சரித்துள்ளனர். (ஜ-4)

# முதலாவது ஆலோசகர் குணமடைந்தார்

(கொழும்பு)
கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக் கப்பட்டதாக அடையாளம் காண ப்பட்ட முதலாவது ஆலோசகர், பூரண குணமடைந்து வைத் தியசாலையில் இருந்து வீடு திரும்பியுள்ளார்.

ஹபராதுவை- ஹினட்டிகல பகுதியைச் சேர்ந்த இவர், பொரளை ஐ.டி.எச்.வைத்திய சாலையில் சிகிச்சை அளிக்கப் பட்டு வந்த நிலையில், பூரண குணமடைந்து நேற்று ஞாயி ற்றுக்கிழமை வீடு திரும்பி யுள்ளார்.

மேலும் இவருடன் தொட ர்பினை பேணியிருந்த மனைவி உள்ளிட்ட 21 பேரு க்கும் பி.சி.ஆர்.பரிசோதனை செய்யப்பட்டிருந்தது.

குறித்த பரிசோதனையில் அவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட வில்லை என உறுதி செய் யப்பட்டுள்ளது.

எனினும் நாளை மறு தினம் 22ஆம் திகதியும் இவர் கள் அனைவருக்கும் இரண்டா வது பி.சி.ஆர். பரிசோதனை செய்ய நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளதாக ஹபராதுவை சுகாதார அதிகாரி தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக் கது. (ஜ-4)

# 23 ஆயிரத்து 951 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்தனர்

(கொழும்பு)
கொவிட்-19 நாட்டில் பரவ ஆரம்பமாகிய நாள் முதல் இது வரையான காலப்பகுதியில் 23 ஆயிரத்து 951 பேர் தனி மைப்படுத்தலை நிறைவு செய் துள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்ரமசிங்க தெரிவித்தார்.

53 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 6 ஆயிரத்து 257 பேர் தொடர்ந்தும் தனி மைப்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று முன் தினம் 219 பேர் தனிமை ப்படுத்தலை நிறைவு செய்து வீடுகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டமை குறிப்பிடத்தக் கது. (ஜ-8)




ஜெட் வேகத்தில் உயர்வடைந்துள்ள பொருட்கள், சேவைகளின் விலையைக் குறைக்குமாறும், எரிபொருள் விலையிலும் மாற்றத்தை ஏற்படுத்துமாறு வலியுறுத்தியும் தேசிய மக்கள் சக்தி, மக்களோடு இணைந்து ஹற்றனில் நேற்று ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டது.

# இந்தியாவை அச்சுறுத்தும் கொரோனா அதிகப்படியான தொற்றாளர்கள் பதிவு

(டில்லி)
இந்தியாவில் நேற்று முன் தினம் மாத்திரம் 38 ஆயிரத்து 902 புதிய கொரோனா தொற் றாளர்கள் அடையாளம் காண ப்பட்டுள்ளதுடன், 543 உயிரி ழப்புகளும் பதிவாகியுள் ளதாக அந்நாட்டு சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் நேற்று உறுதிப்படுத்தியுள்ளது.



கொரோனா பரவல் ஆரம் பித்ததிலிருந்து இந்தியாவில் ஒரே நாளில் பதிவான அதிக படியான கொரோனா தொற்றா ளர்களின் எண்ணிக்கை இது வாகும்.

இந்தியாவில் தற்போது ஒரு மில்லியனுக்கும் அதிகமான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள் ளதாக அமெரிக்காவின் ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத் தின் தரவுகள் சுட்டிக்காட்டுகின் றன. அதன்படி இந்தியாவில் மொத்த கொரோனா தொற் றாளர்களின் எண்ணிக்கை யானது 10 இலட்சத்து 77 ஆயிரத்து 781 ஆகவும், உயிரி ழப்புகளின் எண்ணிக்கையா னது 26 ஆயிரத்து 816 ஆக காணப்படுகிறது.

இதேநேரம் கொரோனா தொற்றுக்குள்ளான 6 இலட்ச த்து 77 ஆயிரத்து 423 பேர் பூரண குணமடைந்துமுள் ளனர். (ஜ-2)

# அரச புலனாய்வு சேவை தகவல்களை பொலிஸாருடன் பகிர்ந்து கொள்ளும் கடப்பாட்டை கொண்டிருக்கவில்லை

## முன்னாள் பொலிஸ்மா அதிபர் சாட்சியம்

(கொழும்பு)

**நாட்டின் அரச புலனாய்வு சேவை, பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்பட்டா லும் புலனாய்வு தகவல்களை பொலிஸாருடன் பகிர்ந்து கொள்ளும் கடப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என முன்னாள் பொலிஸ்மா அதிபர் என். கே.இலங்கக் கோன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் தெரிவித்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் சாட்சியாக அழைக்கப்பட்ட அவர்,

தாம் பொலிஸ்மா அதிபராக பதவி வகித்த காலப்பகுதியில் அரச புலனாய்வு சேவை தமது பதவியின் கீழ் இருக்க வில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அப்போது அரச புலனாய்வு துறைக்கு பணிப்பாளராக இருந்த நிலந்த ஜெயவர்த்தன, நாட்டில் அதிகரித்து வந்த இஸ்லாமிய தீவிரவாதம் தொடர்பான தகவல்களை பொலிஸ் அதிகாரிகளுடன் பகிர்ந்துகொண்டதாக இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவர் அரச புலனாய்வுத் துறையினருக்கும், பொலிஸாருக்கும் அனுப்பிய கடிதங்களில் தௌஹீத் ஜமாத் மற்றும் ஜமாத் இஸ்லாம் போன்ற அமைப்புக்கள் முஸ்லிம் இளைஞர்கள் ஊடாக தீவிரவாதத்தை பரப்புவதன் காரணமாக நாட்டில் பாரிய சேதம் ஏற்படலாம் என்பதை குறிப்பிட்டிருந்ததாகவும் இலங்கக் கோன் சாட்சியமளித்துள்ளார்.

இதேவேளை 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தேசிய பாதுகாப்பு சபையும், இஸ்லாமிய தீவிரவாதம் தொடர்பாக அடிக்கடி கலந்துரையாடல்களை நடத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல்களை அடுத்து இஸ்லாமிய தீவிரவாதம் நாட்டில் பரவுவதை கண்காணிக்கும் வகையில் சிறப்பு பொறிமுறை ஒன்றை அமைத்திருந்ததாகவும், முன்னாள் பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தெரிவித்துள்ளார். (ஜ-4)




# பேருந்து கவிழ்ந்து மூவர் உயிரிழப்பு

கனடாவில் சுற்றுலாப் பேருந்தொன்று பள்ளத் தாக்கில் வீழ்ந்து விபத்துக் குள்ளானதில் மூவர் உயி ரிழந்துள்ளது டன், பலர் காயமடைந்துள்ளதாக சர் வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கனடாவின் ஆல்பர்ட்டா மாகாண த்திலுள்ள ஜாஸ்பர் தேசிய பூங்காவிலுள்ள மலைப் பகுதிகளிலேயே குறித்த சம்பவம் நேற்று முன்தி னம் சனிக்கிழமை இடம் பெற்றது.

பனிப் பாறைகளை பார் வையிடுவதற்காக 27 சுற் றுலாப் பயணிகளுடன்சென்ற பேருந்தொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதுடன், காயம டைந்தவர்கள் தற்போது ஆல்பர்ட்டா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரு கின்றனர்.

விபத்தினையடுத்து ஹெலிகொப்டர் மற்றும் அம்புலன்ஸ் மூலமாக மீட்புப் பணிகள் இடம்பெற்றதுடன் விபத்துக்கான காரணம் தொடர்பிலும் அதிகா ரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-2)


பாராளுமன்ற தேர்தல் – 2020 | யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

ஜனாதிபதியின் விசேட திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பாளர் [தை - கார்த்திகை 2019] 315 நாட்கள்

நாட்டுக்காக ஒன்றிணைவோம்

| நிகழ்ச்சித்திட்டம் | மொத்த வேலைத்திட்டங்கள் | ஒதுக்கப்பட்ட முழுத்தொகை (ரூ.மி) | பயனாளிகளின் தொகை |
|---|---|---|---|
| கிராமசக்தி தேசிய வேலைத்திட்டம் | 388 | 4.16 | 30,663 |
| தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் | 324 | 7.87 | 12,818 |
| சிறிய அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் | 37 | 0.07 | 30,663 |
| தேசிய சுற்றாடல் பாதுகாப்பு வேலைத்திட்டம் | 1156 | 10.56 | 99,280 |
| போதைப்பொருள் தடுப்பு தேசிய வேலைத்திட்டம் | 524 | 3.57 | 83,187 |
| சிறுநீரக நோய்த்தடுப்பு வேலைத்திட்டம் | 599 | 14.56 | 42,960 |
| சிறுவர்களை பாதுகாப்போம் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 628 | 9.53 | 40,969 |
| மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர் வலுவூட்டல் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 201 | 17.48 | 13,255 |
| நிலைபேறான பாடசாலைகள் அபிவிருத்தி வேலைத்திட்டம் | 204 | 1.76 | 10,801 |
| ஸ்மார்ட் ஸ்ரீலங்கா | 95 | 25.72 | 28,971 |
| "ஜனாதிபதிக்கு கூறுங்கள்" நிகழ்ச்சித்திட்டம் | 06 | - | 606 |
| ஏனையவை | 1,325 | 321.87 | 58,425 |

மொத்த வேலைத்திட்டங்கள் 5,487
பயனாளிகளின் தொகை 424,445
ஒதுக்கப்பட்ட முழுத்தொகை ரூ.417,108,000

பாராளுமன்ற உறுப்பினராக... [புரட்டாதி 2015 - பங்குனி 2020] 1640 நாட்கள்

பன்முகப்படுத்தப்பட்ட நிதி (2015.2016): செயற்படுத்திய திட்டங்கள் 115; மொத்த பயனாளிகள் 40,000+; ஒதுக்கப்பட்ட தொகை ரூ.15,000,000

பன்முகப்படுத்தப்பட்ட நிதி (2017): செயற்படுத்திய திட்டங்கள் 79; மொத்த பயனாளிகள் 35,000+; ஒதுக்கப்பட்ட தொகை ரூ.10,000,000

பன்முகப்படுத்தப்பட்ட நிதி (2018): செயற்படுத்திய திட்டங்கள் 85; மொத்த பயனாளிகள் 47,000+; ஒதுக்கப்பட்ட தொகை ரூ.10,000,000

பன்முகப்படுத்தப்பட்ட நிதி (2019): செயற்படுத்திய திட்டங்கள் 134; மொத்த பயனாளிகள் 32,000+; ஒதுக்கப்பட்ட தொகை ரூ.10,000,000

பன்முகப்படுத்தப்பட்ட நிதி - தொகுப்பு (2015-2019): செயற்படுத்திய திட்டங்கள் 413; மொத்த பயனாளிகள் 154,000+; ஒதுக்கப்பட்ட முழுத்தொகை ரூ.45,000,000

முன்னாள் போராளிகளுக்கான உதவித் திட்டங்கள்: ஒதுக்கப்பட்ட முழுத்தொகை ரூ.17,200,000

கிராமிய உட்கட்டமைப்பு விசேட திட்டங்கள்
செயற்படுத்திய வருடம் - 2017, செயற்படுத்திய திட்டங்கள் - 37, ஒதுக்கப்பட்ட முழுத்தொகை ரூ.74,200,000
செயற்படுத்திய வருடம் - 2018, செயற்படுத்திய திட்டங்கள் - 5, ஒதுக்கப்பட்ட முழுத்தொகை ரூ.5,500,000

ஏனைய உதவி திட்டங்கள்
தனிப்பட்ட நிதியிலிருந்து 2000 வீட்டுத்தோட்டம் அமைப்பதற்குரிய விதைகளை இலவசமாக வழங்கியமை
அனர்த்த முகாமைத்துவ அமைச்சினூடாக ரூ 8.0 மில்லியன் நிதியொதுக்கீட்டில் அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டமை
மத்திய அமைச்சின் விசேட நிதியொதுக்கீட்டில் ரூ 5.5 மில்லியன் பெறுமதியிலான வீதி அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டமை
மத்திய அமைச்சின் விசேட நிதியொதுக்கீட்டில் ரூ 8 மில்லியன் பெறுமதியிலான வடிகால் அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டமை




"யாழ் - கிளிநொச்சி மாவட்டங்களை முதல்நிலை மாவட்டங்களாக்கும் பயணத்தின் ஆரம்பம்"

X 1 அங்கஜன் இராமநாதன்

எங்கள் யாழ் நோக்கிய பயணம்...

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி - Sri Lanka Freedom Party (C-062)

# புங்குடுதீவு வீட்டுத்திட்டம் பயனாளிகளிடம் கையளிப்பு





(யாழ்ப்பாணம்)
தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் 14.8 மில்லியன் ரூபாய் நிதியில் இராணுவத்தி னரால் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட புங்குடுதீவு வீட்டுத்திட்டத் தின் 25 வீடுகள் நேற்று முன் தினம் பயனாளிகளிடம் கைய ளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம். சார்ள்ஸ், இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, யாழ்.மாவட்ட அரசா ங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், யாழ்.மாவட்ட கட்ட ளைத்தளபதி ருவான் வணிக சூரிய, யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ்.மாவட்ட மேலதிக அரசா ங்க அதிபர் (காணி) எஸ்.முரளி தரன், பிரதம செயலாளர் எஸ். பத்திநாதன், அரச அதிகாரிகள், யாழ்.மாவட்ட பிரதிப் பொலி ஸ்மா அதிபர் மகேஸ் சேனார த்ன, கடற்படை அதிகாரி ஆகி யோர் கலந்து கொண்டனர். (ஜ-5-8-101)

## நாக சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான நாக சதுர்த்தி விரதத்தை முன் னிட்டு எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.45 மணியளவில் அபிஷேகம் ஆர ம்பமாகி தொடர்ந்து பூஜைகள் இடம்பெற்று வீதியுலாவுடன் உற் சவம் நிறைவடையும். (5)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)
நல்லூர் சட்டநாதர் கோவில் மேற்கு வீதி ஸ்ரீ பால கதிர்காமம் தேவஸ்தான மஹோற்சவம் இன்று 20 ஆம் திகதி திங்கட் கிழமை ஆரம்பமாகி 15 தினங் கள் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் தீர்த்தோற் சவம் நடைபெறும்.

நாட்டின் தற்போதைய சூழ் நிலை காரணமாக இம்முறை ஆடிவேல் இரதபவனி இடம் பெறாது என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (5)

## நீர்வேலி, கல்வியங்காடு பகுதிகளில் சுற்றிவளைப்பில் 8 பேர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்.நீர்வேலி, கல்வியங் காடு பகுதிகளில் கோப்பாய் பொலிஸார் நடத்திய திடீர் சுற்றி வளைப்பின் போது தலைம றைவாகியிருந்த 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலை இடம் பெற்ற இந்தச் சுற்றிவளைப்பு தேடுதலின்போது நீதிமன்றத் தால் பிடியாணை பிறப்பிக்க ப்பட்ட நிலையில் தலைமறை வாக இருந்த நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட் டதாக பொலிஸார் தெரிவித்த னர்.

கைது செய்யப்பட்ட அனை வரையும் நீதிமன்றத்தில் முற் படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின் றது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (5-8)

## பதிவு மேற்கொள்ளாமல் தொழிலில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகளுக்கு எதிராக நடவடிக்கை

(சாவகச்சேரி)
சாவகச்சேரி நகரசபையில் பதிவு செய்யாமல் தரிப்பிடங்க ளில் தரித்து நின்று தொழிலில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகளு க்கு எதிராக நடவடிக்கை எடுக்க நகரசபை தீர்மானித்துள்ளது.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதா ந்த அமர்வின் போதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது. சாவ கச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதனின் கோரிக்கைக்கு அமைவாக இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது தொட ர்பாக மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபை எல் லைக்குள் நகரசபையின் பதிவு இல்லாமல் பல முச்சக்கரவண் டிகள் தரிப்பிடங்களில் தரித்து நின்று தொழிலில் ஈடுபடுகின் றன. சாவகச்சேரி நகரசபையில் மாத்திரமே இந்நிலைமை காண ப்படுகிறது. ஏனைய சபைகளில் முச்சக்கரவண்டிகளுக்கான பதி வுகள் காணப்படுகின்றன. இது வரை சாவகச்சேரி நகரசபை யில் பதிவினை மேற்கொண்டு ள்ள முச்சக்கரவண்டிகளின் தரவினை பொலிஸாரிடம் வழ ங்கி, பதிவு செய்யப்படாத முச் சக்கரவண்டி உரிமையாளர்க ளுக்கு எதிராக நடவடிக்கை எடு க்க வேண்டும். நுணாவில், தபால் நிலைய வீதி, சாவகச் சேரி நகர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பு றம், அரசடிச் சந்தி,ஐயா கடைச் சந்தி, மீசாலை மற்றும் புத்தூர்ச் சந்தி ஆகிய நகரசபை எல் லைக்குட்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடங்களில் நின்று தொழி லில் ஈடுபடுவோர் பதிவுகளை மேற்கொள்ளாத பட்சத்தில் அவர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுடன், புதிதாக பதிவினை மேற்கொள்பவர்களுக்கு தரிப் பிடங்களில் நின்று தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதியை யும் வழங்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந் தார்.

முச்சக்கரவண்டி உரிமை யாளர்கள் நகரசபையில் பதி வினை மேற்கொள்ள குறுகிய கால அவகாசம் வழங்கப்படும். அதன் பின்னர் பதிவுகள் இல் லாது தரிப்பிடங்களில் நின்று தொழிலில் ஈடுபடும் முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடு க்க சாவகச்சேரி நகரசபை தீர்மா னித்துள்ளது. (4-5-30)

## ஆடிப்பூர தீர்த்தம்

(குப்பிழான்)
ஊரெழு பர்வதவர்த்தனி மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெரு விழா கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்து டன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெற்றுவரும் இம் மஹோ ற்சவத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணியளவில் தேர்த் திருவிழா வும் ஆடிப்பூர நன்னாளான 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் தீர்த் தத் திருவிழாவும் அன்றைய தினம் மாலை கொடியிறக்க உற் சவமும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, இந்த வரு டம் கொரோனாத் தொற்றுக் கார ணமாக சுகாதார நடைமுறைக ளைக் கடைப்பிடித்து மஹோற் சவம் இடம்பெறுவது குறிப்பிட த்தக்கது. (4-5-18)

## தேர்த்திருவிழா

(குப்பிழான்)
குப்பிழான் கற்கரைக் கற் பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து 10 நாட்கள் காலை - மாலை உற்சவங்க ளாக இடம்பெறவுள்ளன.

இம்மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தீர் த்தத் திருவிழா மறுநாள் 3 ஆம் திகதி திங்கட்கிழமையும் இடம் பெறவுள்ளன.

கொரோனாத் தொற்று கார ணமாக ஆலயத்திற்கு வரும் அடியார்கள் சுகாதார நடைமு றைகளை உரிய வகையில் கடைப்பிடிக்குமாறு ஆலயபரி பாலன சபையினர் அறிவித்துள் ளனர். (4-5-8-18)

## தேர்தல் நடவடிக்கைகளுக்காக 9 கோடி 28 இலட்சம் ரூபாய்



(கொழும்பு)
தேர்தல் நடவடிக்கைகளு க்காக சுமார் 9 கோடி 28 இல ட்சம் ரூபாய் பொலிஸ் திணைக் களத்திற்கு வழங்க தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பொலிஸ் உத்தி யோகத்தர்களுக்கான கொடுப்ப னவு, எரிபொருள் மற்றும் உணவுச் செலவுகளுக்காக குறித்த நிதி வழங்கப்படவுள் ளது. (ஜ-8)



**NPL மென்பந்து சுற்றுத்தொடரின் 2 ஆவது Season யாழ்ப்பாணம் றில்கோ விடுதியில் நேற்று முன்தினம் 18 ஆம் திகதி நடைபெற்றது. அதன் முதற்கட்டமாக வீரர்கள் ஏலம் பிற்பகல் 2 மணியளவில் கிருபா லேணர்ஸ் உரிமை யாளர் கிருபாகரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத் தொடரில் 14 அணிகள் பங்கு பற்றுவதுடன் ஒரு அணிக்கு 16 வீரர்கள் வீதம் 224 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் NPL போட்டி எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் ஆரம் பிக்கப்படவுள்ளதுடன் போட்டிகள் அனைத்தும் NPL தொட ரின் முகநூல் ஊடாக ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளது.**

# சிவப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் சில பகுதிகளில் எதிர்வரும் நாட்களில் கடுமையான மின்னல் ஏற்படும் என்று வானிலை அவதான நிலையம் 'சிவப்பு' எச்சரிக்கை விடுத்துள்ளது. கிழக்கு, வட-மத்திய, மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், குருநாகல், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் கடுமையான மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

இந்தப் பகுதிகளில் சில இடங்களில் 50 மி.மீ க்கும் அதிகமான கனமான நீர்வீழ்ச்சி சாத்தியமாகும். இடியுடன் கூடிய மழையின் போது வலுவான காற்று வீசக் கூடும். நேற்று இரவிலிருந்து இந்த காலநிலை மாற்றம் ஆரம்பித்து நீடிக்க உள்ளது. மின்னல் காரணமாக ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஜ-4)

# போக்குவரத்து நடவடிக்கையை 50 சதவீதமாக குறைக்கவுள்ளோம்

## தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

நாளை முதல் தனியார் பேருந்துகளின் போக்குவரத்து நடவடிக்கையினை 50 சதவீதமாக குறைக்கவுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும்தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் பரவலுடன் தனியார் பேருந்து தொழிற்துறைக்கு ஏற்பட்டுள்ள அழுத்தம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் கிடைக்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலைக்கு அமைய தமது தொழிற்றுறையை முன்னெடுத்து செல்ல வேண்டுமானால் எரிபொருள் நிவாரணம் அல்லது கட்டணத்தை அதிகரிப்பது அத்தியாவசியமாகும் என அவர் தெரிவித்தார். எனினும் பேருந்துக் கட்டண அதிகரிப்பிற்கு இடமளிக்கப்படமாட்டாது என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)



# சுற்றிவளைப்பில் 1563 பேர் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் ஆயிரத்து 563 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 771 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேல் மாகாணத்திற்கு பொறுப்பாக பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் வழங்கிய ஆலோசனைக்கமைய இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஹெரோயின், ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருட்களை தம்வசம் வைத்திருந்தமை தொடர்பில் 792 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதவிர முகக்கவசம் அணியாமல் பொது இடங்களில் நடமாடிய 3 ஆயிரத்து 61 பேர் பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-8)

# நீர் கட்டணத்தை செலுத்த சலுகை; டிசெம்பர் வரை துண்டிப்பில்லை

(கொழும்பு)

நீர் கட்டணத்தை செலுத்தாத பாவனையாளர்களின் நீர் விநியோகத்தை இந்த வருட இறுதி வரை துண்டிக்காதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

வீட்டுப் பாவனையாளர்களுக்கு மாத்திரமே இந்தச் சலுகை வழங்கப்படுமென்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது. மார்ச் ஏப்ரல் மே மாதங்களில் பாரியளவில் நீர் கட்டணம் அதிகரித்துள்ளதாக பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கைது!

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மாகாண சபை உறுப்பினருமான நிமால் ஆர். பீரிஸ் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடுவல நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணை உத்தரவினைத் தொடர்ந்தே அவர் தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 460 ரூபா தபால் கட்டணத்தை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டுக்கு அமைவாகவே அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ஜ-4)

# தந்தையைக் கொன்ற மகன்

(கொழும்பு)

பல்லம களுகெலே பிரதேசத்தில் வீடொன்றில் மகனால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில் அவரது தந்தை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு வலுவடைந்ததால் மகனால் இந்த தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

காயமடைந்த நபர் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

39 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான மகன் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)

# மோதிக்கொண்ட மோட்டார் சைக்கிள்கள்

## மூவர் படுகாயம்

(செங்கலடி)

மட்டக்களப்பு - செங்கலடி பிரதான வீதியில் நேற்று முன்தினம் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டதில் பெண் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் முன்னால் சென்றவர்கள் திடீரென திரும்பியதனால் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

இதன் போது முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரும், பின்னால் வந்த மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த ஒருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)

# பொலிஸாரின் கட்டளையை மீறி பயணித்த கார் மீது துப்பாக்கிச்சூடு

(கொழும்பு)

கிரியுல்ல பகுதியில் கட்டளையை மீறி பயணித்த கார் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

நேற்று அதிகாலை பன்னலவில் இருந்து கிரியுல்ல நோக்கி நிறுத்தாமல் பயணித்த கார்மீது யக்கபெதி பகுதியில்வைத்து பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் எவருக்கும் காயமேற்படவில்லை. இதன்போது காரில் பயணித்த இருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலை அதிகாரிகள் என தெரிவித்து காம்பெல்பார்க் பகுதியில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிலையத்தில் இருந்து காரொன்றை வாடகை அடிப்படையில் சந்தேக நபர்கள் பெற்றுச் சென்றுள்ளனர்.

சாரதியுடன் சென்ற குறித்த சந்தேக நபர்கள் குளியாப்பிட்டிய, கொஹிலவெல பகுதியில் வைத்து சாரதியை கட்டிவைத்து விட்டு காரை கடத்திச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கிடைத்த தகவலுக்கமைய வீதித்தடைகளை ஏற்படுத்திய பொலிஸார் நேற்று அதிகாலை முதல் சோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போதே பன்னலவில் இருந்து கிரியுல்ல நோக்கி பயணித்த குறித்த கார். கட்டளையை மீறி பயணித்ததை தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடத்தியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஜ-4)


பாராளுமன்ற தேர்தல் - 2020



X 10



இதுவரை ஏமாற்றியோரை ஒதுக்கி வைப்போம்
இனி ஒரு புதுச் சரித்திரம் படைப்போம்

வேலாயுதம் கணேஸ்வரன்
(யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர்)

ஐக்கிய மக்கள் சக்தி (SJB)




முல்லைத்தீவு-கிளிநொச்சி மாவட்டங்களின் எல்லைக் கிராமமான சாந்தபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் கோ.சற்குணபாலனுடன் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனும் கலந்து கொண்டார். இதன்போது தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் வேட்பாளர்கள் பயன்தரு மரக்கன்றுகளையும் நாட்டி வைத்தனர்.

# மோ.சைக்கிள் மோதி சிப்பாய் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கைதடி இராணுவச் சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ சிப்பாய் மீது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்து, நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் இராணுவச் சிப்பாய் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைதடி பகுதியில் அமைந்துள்ள குறித்த இராணுவச் சோதனைச் சாவடி வழியாக அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிளை கடமையிலிருந்த இராணுவச் சிப்பாய் மறித்துள்ளார்.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் வந்தவர் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் நிலைதடுமாறி இராணுவச் சிப்பாய் மீது மோதியுள்ளார். இதனால் இராணுவச் சிப்பாய் படுகாயமடைந்தார்.

இந்நிலையில், மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞன் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதுடன், இவ்விபத்து குறித்து விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது. (5-8)

# இரட்டை மாட்டு வண்டி சவாரி போட்டி





(மன்னார்)

மன்னார் கற்கடந்தகுளம் கிராம மக்களின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட இரட்டை மாட்டு வண்டி சவாரிச் சங்கத்தின் அனுசரணையில், கற்கடந்த குளம் இரட்டை மாட்டு வண்டி சவாரித் திடலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரட்டை மாட்டுவண்டி சவாரி போட்டி இடம் பெற்றது. இப் போட்டியில் மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த 25 சோடி காளைகள் போட்டியில் கலந்து கொண்டன. (5-285)



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் 73 ஆவது நினைவு தினம் வவுனியா, கண்டி வீதியில் அமைந்துள்ள அவரது சிலை அடியில் நேற்று தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சந்திரகுமார் கண்ணன் தலைமையில் நடைபெற்றது.

(படம்:- நெளுக்குளம் செய்தியாளர்)

# மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உழவனூர்ப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு உழவு இயந்திரங்களுடன் அதன் சாரதிகள் இருவரும் தருமபுரம் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

மணல் அகழ்வின் போது கைது செய்யப்பட்ட இருவரும் கடும் நிபந்தனைகளுடன் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (4-5-316)

# பொலிஸாரால் மீட்கப்பட்ட 3 லட்சம் பெறுமதியான மரக்குற்றிகள்




(முறிகண்டி)

கிளிநொச்சியில் 3 லட்சம் பெறுமதியான தேக்க மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன. இதேவேளை குறித்த மரக்குற்றிகளை ஏற்றிய வாகனம் விபத்துக்குள்ளான நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டன. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியிலிருந்து குறித்த மரம் ஏற்றிய வாகனம் சென்றபோதே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சட்டவிரோதமாக குறித்த மரக்குற்றிகள் ஏற்றிச் செல்லப்படுகின்றமை தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைத்த தகவலிற்கு அமைவாக பொலிஸார் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசிய தகவலிற்கு அமைவாக கிளிநொச்சி தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாக சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் குறித்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து கிளிநொச்சி திருவையாறு பகுதியில் விபத்துக்குள்ளாகியது.

குறித்த வாகனம் மற்றும் ஏற்றி வந்த மரக்குற்றிகளை பொலிஸார் மீட்டதுடன், சந்தேக நபர்களைத் தேடும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு மற்றும் மரக்கடத்தல்கள் இடம்பெற்று வருகின்றமை தொடர்ச்சியாக பதிவாகிவரும் நிலையில் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-5-100)

# கனகராயன் குளத்தில் யானைகள் அட்டகாசம்;20 தென்னை மரங்கள் சேதம்

(குருமன்காடு)

வவுனியா, கனகராயன்குளம் வடக்கு பகுதியில் யானைகளின் அட்டகாசம் காரணமாக 20 இற்கு மேற்பட்ட பயன் தரு தென்னை மரங்கள் அழிவடைந்துள்ளன.

வவுனியா, கனகராயன்குளம் வடக்கு பகுதியில் ஆற்றங்கரையை அண்டியதாக உள்ள மேட்டுக் காணியில் காணப்படும் தென்னந்தோட்டத்திற்குள் நேற்று முன்தினம் இரவு வேளை யானைகள் அங்கு நின்ற பயன்தரு தென்னை மரங்களை முறித்து வீழ்த்தி சேதப்படுத்தின.

யானைகளின் அட்டகாசம் காரணமாக காய்த்துக் கொண்டிருந்த 20 வரையிலான தென்னை மரங்கள் அழிவடைந்துள்ளதாக தெரிவித்ததுடன் தமது வருமானம் தரும் பயிர்களை யானைகளிடம் இருந்து காப்பாற்ற உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், இப்பகுதியில் தொடர்ச்சியாக இரவு வேளைகளில் யானைகளின் நடமாட்டம் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (4-5-250)



பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-9920)

**ரெங்கசாமி** கண்டி, அம்பத்தன்ன - **077 112 3471** Viber - 076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

## கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து), மூளாய்

### பதவி வெற்றிடங்கள்

எமது வைத்தியசாலைக்கு பின்வரும் பதவிகளுக்கு விண் ணப்பங்கள் கோரப்படு கின்றன.

**1.தாதிய உதவியாளர் (Nursing Aid)**
**2.ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் (Laboratory Technician)**
**3.சுகாதார உதவியாளர் (Health Assistant)**

கீழ்க்காணும் பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

**1.சுகாதார உதவியாளர் (Health Assistant)**
**2.ஆய்வுகூட பயிலுநர் (Laboratory Trainee)**

மேற்படி பதவிகளுக்காக விண்ணப்பிப்பவர்களும் பயிற்சிகளுக் காக விண்ணப்பிப்பவர் களும் வைத்தியசாலையில் 26.07.2020 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெறும் நேர்முகப் பரீட் சையில் பங்குகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். நேர் முகப் பரீட்சைக்குச் சமூகம் கொடுக்கும் போது தங்களுடைய ஆளடை யாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களையும் தகைமைச் சான்றிதழ்களையும் சமர்ப்பிக்க வேண்டும் என்பதைக் கருத்திற் கொள்ளவும்.

**தலைவர், கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம், மூளாய்**

(C-9919)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்தலும்

### அமரர். ஆறுமுகம் வசந்தன்



எங்கள் உதிரத்தில் தோன்றி உறவோடு கலந்து உத்தமனாக வாழ்ந்து மறைந்த எமது குடும்ப குலவிளக்கின் அந்தியேட்டி கிரியைகள் 20.07.2020 **இன்று திங்கட்கிழமை** காலை 8.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கடற்கரையிலும் வீட்டுக் கிரியைகள் 21.07.2020 **நாளை செவ்வாய்க்கிழமை** அவரது அளவெட்டி இல்லத்தில் நடைபெறுவதுடன் அன்றே நிகழும் மதிய போசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை மிக அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவையிட்டு நேரடியாகவும் பதாகைகள், பிரசுரங்கள் மூலமாகவும் தொலைபேசி வாயிலாகவும் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் ஆறுதல் புரிந்தவர்களுக்கும் எமது பணிவான வணக்கங்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

(3356)

**மணற்புலம், அளவெட்டி கிழக்கு.**

**மனைவி மற்றும் பெற்றோர் குடும்பத்தினர் மானாங்கனை,வல்வெட்டித்துறை**

## 19 குட்டிகளுடன் வெளிவந்த நாகம்




(கொழும்பு)

கட்டுகஸ்தொட உடுவாவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்த 19 நாகபாம்புக் குட்டிகளுடன் ஒரு பெரிய நாகம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வீட்டின் கட்டுமானப் பணிகளின் போது குறித்த நாகக் குட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார். விலங்குகளை துன்புறுத்தாத வகையில் அவைகள்பிடிக்கப்பட்டு வனவிலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஜ-4)

## 25 ஆம் ஆண்டு நினைவு தினம்

### அமரர்.இளையகுட்டி யோகதுரை (ராசா)



**பிறப்பு:- 27.01.1958**
**இறப்பு:- 27.07.1995**
**திதி: அமாவாசை 20.07.2020**

அன்பின் அப்பா!
அழியாத ஓவியமே
அழைத்து
விட்டாரே இறைவன்
தன்னுடனே உமை
ஆண்டுகள் இருபத்தைந்து
ஆகியதே
எமை நீர் பிரிந்து
ஆனாலும் மறக்கவில்லை
எம்மனம் உம்மை
நீங்கள் இன்று
இருந்திருந்தால்
தாத்தா வெனக் கொஞ்சுமே
எம் பிள்ளைகள் அதற்கு முதலே காலன் உம்மை அழைத்தாரோ
சாவே உனக்கு ஒரு நாள் சாவு வராதா ஆனாலும் தேற்றுகிறோம்
எம் இதயத்தை மறக்க முடியாமல் துடிக்கின்றோம் உம் நினைவுகளை

**ஊரெழு கிழக்கு, நாவலம்பதி.**

(C-9918)

**உம் பிரிவால் வாடும் பிள்ளைகள்.**

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு:- 06.11.1948 இறப்பு:- 22.06.2020

கடந்த 22.06.2020 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

### அமரர். மகேஸ்வரன் நகுலேஸ்வரி (ராணி)

அன்பின் அகராதியாய் அமைதியின்
சிகரமாய் என்றும் வாழ்வில்
இன்பங்களை அள்ளித்தந்த
எம்மை ஆறாத துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்ட எங்கள்
குடும்பத் தலைவி

**திருமதி.மகேஸ்வரன் நகுலேஸ்வரி (ராணி)** அவர்கள் மறைவுற்ற செய்தி அறிந்து எம் இல்லத்திற்கு நேரில் வந்து அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது துக்கத்தில் பங்குகொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு 21.07.2020 நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதைத்தொடர்ந்து 12 மணியளவில் இடம்பெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வன்னிச்சி அம்மன் கோவிலடி, வல்வெட்டி.** (3375) **குடும்பத்தினர்.**

# 1921 முதல் இன்று வரை வடமாகாண பாராளுமன்றத் தேர்தல்களும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும்



**09**

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

உதாரணத்திற்கு பருத்தித்துறைத் தேர்தல் தொகுதியில் 50ஆயிரம் வாக்காளர்கள் இருந்தார்கள் என்றால் அவர்களில் 50பேர் கொழும்பில் வசித்திருந்தார்களென்றால் அந்த 50பேரில் வாக்களிக்கின்ற உரிமை இருந்த பத்துப் பேர் தமது வாக்குகளை அளித்திருக்கின்றார்கள். அந்த மாதிரியான வாக்குகளே அந்த ஐந்தும் பத்துமாக அளிக்கப்பட்ட வாக்குகளே தவிர மக்களுக்கு வாக்களிக்க விருப்பமின்மையால் அல்ல. அன்று தமிழ் மக்களுடைய ஜனநாயக உரிமைகள் புலிகளால் பலாத்காரமாக மறுக்கப்பட்டிருந்தன. அதேநேரம் அங்கிருக்கின்ற புலிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகளுடைய தலைவர்கள் கொல்லப்பட்டதும் புலிகளால்தான்." இவ்வாறு தன்மீது கூறப்பட்ட அவதூறுக்கு பதிலளித்திருந்தார்.

| அட்டவணை 18<br>இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 1994<br>யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்<br>தேர்தலில் வெற்றியடைந்தவர்கள் | | |
|---|---|---|
| தெரிவு செய்யப்பட்டவரின் பெயர் | கட்சி | விருப்பு வாக்குகள் |
| டக்ளஸ் தேவானந்தா | EPDP | 2,091 |
| அழகையா இராசமாணிக்கம் | EPDP | 1,110 |
| உமாபதிசிவம் பாஸ்கரன் | EPDP | 1,056 |
| ராஜேந்திரம் ராம்மூர்த்தி | EPDP | 1,050 |
| நடராசா அற்புதராஜா | EPDP | 968 |
| முருகேசு சந்திரகுமார் | EPDP | 798 |
| சங்கரப்பிள்ளை சிவதாசன் | EPDP | 456 |
| சின்னையா தங்கவேல் | EPDP | 398 |
| எம்.ஏ.கபூர். சபருல்லா | EPDP | 351 |
| ஐதுருஸ் எம் இல்லியாஸ் | SLMC | 1,575 |

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெற்ற வாக்குகள் 1994**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெற்ற வாக்குகளைப் பொறுத்தவரையில், 1990 ஒக்டோபர் 30ஆம் திகதி வடக்கிலிருந்த முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளால் 24 மணி நேரத்துள் வெளியேற்றப்பட்டார்கள். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்து வந்த இம்மக்கள் மீது காட்டிக்கொடுப்பு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு 24 மணித்தியாலத்துள் தமது இருப்பிடம் மற்றும் உடைமைகள் அனைத்தையும் விட்டு உடனடியாகவே வெளியேறுமாறு விடுதலைப் புலிகளால் நிர்ப்பந்திக்கப்பட்டதன் காரணமாக அங்கிருந்து வெளியேறினார்கள். ஒரே இரவில் ஏறத்தாழ எண்பதாயிரம் முஸ்லிம்கள் மேற்குறித்த ஐந்து மாவட்டங்களிலிருந்தும் அகதிகளாக வெளியேற்றப்பட்டார்கள். அங்கிருந்து வெளியேற்றப்பட்டு வந்த இம்மக்களில் பெரும்பான்மையானவர்கள் புத்தளத்தில் முகாம்கள் அமைக்கப்பட்டு அங்கு குடியேற்றப்பட்டார்கள். இதுதவிர கொழும்பு, அநுராதபுரம், குருநாகல், மாத்தளை ஆகிய இடங்களிலும் குடியேறினார்கள். இவ்வாறு இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் அளித்த வாக்குகளே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெற்ற வாக்குகளாகும்.

இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு தேர்தல் மாவட்டத்தில் குறைவான வாக்குகள் பதியப்பட்ட சந்தர்ப்பம் இது வாகும். யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர் எண்ணிக்கை 596,366 ஆகும். இதில் 13,831 வாக்காளர்களே தமது வாக்குகளை அளித்திருந்தனர். இது 2.31 சதவீதமாகும். யாழ்ப்பாண மாவட்ட தேர்தலில் இரண்டு பிரதான விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. 1) உடுப்பிட்டித் தேர்தல் தொகுதியில் 52,153 வாக்காளர்கள். இவர்களுள் 8 வாக்காளர்கள் மட்டுமே வாக்குகளை அளித்தனர். 2) இத் தொகுதியின் சார்பில் போட்டியிட்ட சுயேட்சை வேட்பாளர் இத் தொகுதியில் ஒரு வாக்கினையேனும் பெறாமல் பாராளுமன்றத்துக்கு தெரிவானமை (இவர் வேறு தொகுதிகளில் சில விருப்புவாக்குகளை பெற்றிருந்தார்). எனவே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட தேர்தல் முடிவினை தொகுதி ரீதியாகத் தொகுத்து நோக்குவது ஏற்புடையதாக இருக்கும். பாராளுமன்ற உறுப்பினர் நடராசா அற்புதராஜா 1999 ஆம் ஆண்டு நவம்பர் 2 இல் கொல்லப்பட்டார்.

**வன்னித் தேர்தல் மாவட்டம் 1994**

வன்னித் தேர்தல் மாவட்டத்திற்கு 6 ஆசனங்களாகும். வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (**EROS / PLOTE/ TELO**) 3 இடங்களை வென்றது. இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஒரு இடத்தை வென்றது. ஐக்கிய தேசியக் கட்சி ஒரு இடத்தை வென்றது. மக்கள் கூட்டணி (PA) 1 இடத்தை வென்றது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF), நவ சமசமாஜக் கட்சி, மூன்று சுயேட்சைக் குழுக்கள் போட்டியிட்டபோதும் எந்தவொரு ஆசனத்தையும் பெறவில்லை. வன்னித் தேர்தல் மாவட்ட 1994ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள் அட்டவணை-19 மற்றும் 20ல் காட்டப்பட்டுள்ளன.

| அட்டவணை 19- இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 1994<br>வன்னி தேர்தல் மாவட்டம் | | | | | |
|---|---|---|---|---|---|
| தொகுதி | DPLF | சிறீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் | ஐக்கிய தேசியக் கட்சி | மக்கள் கூட்டணி (PA) | பதிவு செய்யப்பட்ட வாக்காளர் |
| மன்னார் | 4,403 | 5,785 | 2,437. | 207 | 54,066 |
| முல்லைத்தீவு | 13 | 906 | 799 | 342 | 52,197 |
| வவுனியா | 7,080 | 1,412 | 4,497 | 4,869 | 72,434 |
| தபால் வாக்குகள் | 71 | 39 | 117 | 165 | - |
| மொத்த வாக்குகள் | **11,567** | **8,142** | **7,850** | **5,583** | 178,697 |
| சதவீதம் | 27.36% | 19.26% | 18.57% | 13.21% | |
| ஆசனங்கள் | 3 | 1 | 1 | 1 | |

| அட்டவணை 20- இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 1994<br>வன்னி தேர்தல் மாவட்டம் தேர்தலில் வெற்றியடைந்தவர்கள் | | |
|---|---|---|
| தெரிவுசெய்யப்பட்டவரின் பெயர் | கட்சி | விருப்பு வாக்குகள் |
| தர்மலிங்கம் சித்தார்த்தன் | ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி | 6.376 |
| சரவணபவானந்தன் சண்முகநாதன் | ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி | 5,828 |
| வைத்திலிங்கம் பாலச்சந்திரன் | ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி | 4,515 |
| அபூபக்கர். எஸ்.எஸ்.எம். | சிறீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் | 4,269 |
| ராஜா மனோகரி புலேந்திரன் | ஐக்கிய தேசியக் கட்சி | 2,217 |
| பிரேமரத்னகே சுமதிபால | மக்கள் கூட்டணி (PA) | 2,975 |

### இலங்கை பாராளுமன்றத் தேர்தல் 2000

2000 ஆம் ஆண்டு இலங்கை பாராளுமன்றத் தேர்தல் இலங்கையின் 11வது பாராளு மன்றத்திற்கு 225 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 2000, ஒக்டோபர் 8 இல் இடம்பெற்றது. 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடந்த தேர்தல்களைப் போலவே இம்முறையும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே தேர்தல்களில் வாக்களித்தனர். யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 1989 தேர்தலின் போது பதினொரு பாராளுமன்ற ஆசனங்கள் இருந்தன. 1994 தேர்தலின் போது அந்த எண்ணிக்கை 10 ஆகவும் 2000 ஆம் ஆண்டு தேர்தலின் போது 9 ஆகவும் குறைக்கப்பட்டிருந்தது. வன்னி தேர்தல் மாவட்டத்திற்கு 6 ஆசனங்களாகும்.

### வடமாகாணத்தில் தேர்தலை நடத்துதல் 2000

இத்தேர்தலின் போது யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் 11 தேர்தல் தொகுதிகளில் வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சி ஆகிய 7 வாக்கெடுப்புப் பிரிவுகளில் அமைக்கப்பெற்றிருந்த 67 வாக்கெடுப்பு மாவட்டங்களில் நிறுவ எதிர்பார்க்கப்பட்ட 68 வாக்களிப்பு நிலையங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக வேறு இடங்களில் நிறுவ தெரிவத்தாட்சி அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இத் தேர்தல் மாவட்டத்தின் ஏனைய 4 (யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, மானிப்பாய், நல்லூர்) வாக்கெடுப்புப் பிரிவுகளோடு தொடர்புடைய வாக்கெடுப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந் நான்கு வாக்கெடுப்புப் பிரிவுகளில் அமைக்கப்பெற்றிருந்த வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை 159 ஆகும். கிளிநொச்சி வாக்கெடுப்புப் பிரிவின் வாக்கெடுப்பு மாவட்டங்களில் 53 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு வாக்களிப்பு நடத்தப்பட திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாக்களிப்பு நிலையங்களில் 8 வாக்களிப்பு நிலையங்களில் மாத்திரமே வாக்களிப்பு நடத்தப்பட்டது.

அதற்குக் காரணம் பாதுகாப்புப் படைகளுக்கும் இலங்கைப் பொலிஸாருக்கும் பாதுகாப்பு வழங்க முடிந்த வாக்களிப்பு நிலையங்கள் அவை மாத்திரமேயாகும்.

அந்த 8 வாக்களிப்பு நிலையங்களும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் மற்றும் மானிப்பாய் இந்து வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் வளவுகளுக்குள் நிறுவப்பட்டன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமையப்பெற்றிருந்த தேர்தல் மாவட்டங்களுக்குரிய வாக்கெடுப்பு மாவட்டங்களின் வாக்களிப்பு நிலையங்களின் அமைவிடத்தை தீர்மானிப்பது பாதுகாப்பு காரணங்களினால் கடினமாகவிருந்தது.

(தொடரும்...)

# இராசிபலன்

20.07.2020
ஆடி 05, திங்கட்கிழமை
அமாவாசை முன்னிரவு 11.30 மணிவரை
புனர்பூசம் முன்னிரவு 10.19 மணிவரை
சுபநேரம் 12.01 - 1.31 மணிவரை
இராகுகாலம் 7.31 - 9.01 மணிவரை
சந்திராஷ்டமம் - மூலம், பூராடம்
ஆடி அமாவாசை விரதம் வளவன்

**மேஷம்** — கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும், தொல்லை கொடுத்தவர்களே தோள்கொடுக்க முன்வருவர், உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**ரிஷபம்** — தொழில் நலன்கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** — கற்பனை மிகுதியான நாள், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**கடகம்** — பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும், அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**சிம்மம்** — உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி த்ரும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** — நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், திறமைகள் வெளிப்படும் நாள், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்** — விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், தடைகளைத் தகர்த்தெறிந்து தன்னிறைவு காணும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**விருச்சிகம்** — குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, தொழில் போட்டிகள் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் நாள்.

**தனுசு** — அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆனந்தமான நாள்.

**மகரம்** — நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தொழில் வளர்ச்சிக்கு தொல்லை கொடுத்தவர்கள் விலகுவர், பழைய பிரச்சினைகளைத் தீர்க்க முழுமூச்சுடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்** — பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், கடமையில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள்.

**மீனம்** — உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், வாகன சுகமுண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பெற்றோர் மீதான பாசம் கூடும் நாள்.

உனது அன்பை அறிவு என்னும் வேலிக்குள் உலாவவிடு.

# நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாக பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் இரத்தம் சிந்தத் தேவையில்லை

## டக்ளஸ் நம்பிக்கை



(சாவகச்சேரி)

நாடாளுமன்ற ஜனநாயக வழிமுறையின் ஊடாக எங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி பகுதியில் இடம்பெற்ற ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் இளைஞரணி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அன்று ஆயுத பலத்தின் ஊடாகவே எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என நம்பி நாங்கள் முன்னோக்கிச் சென்றிருந்தோம். ஆனால் ஒரு கட்டத்திற்கு பின் அந்தப் போராட்டம் பலவீனப்பட்டு திசை திரும்பிய நேரம் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டது.

அதை நாம் ஏற்றுக்கொண்டு அதனூடாக தேசிய நீரோட்டத்தில் கலந்து நாடாளுமன்ற ஜனநாயகம் ஊடாக எங்கள் பிரச்சினைகளைத்தீர்க்கலாம் என்ற நம்பிக்கையோடு முன்னோக்கிச்சென்று கொண்டிருக்கிறோம்.

அன்று ஆயுதப்போராட்டம் ஊடாக பிரச்சினையைத்தீர்க்கலாம் என்று சிந்தித்தோம். ஆனால் இந்தக்காலத்தில் அது சாத்தியமன்று. நாடாளுமன்ற ஜனநாயகம் ஊடாக பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் நாங்கள் பலம் பொருந்தியவர்களாக இருக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் இருக்கும் ஆட்சியாளர்களுடன் தேசிய நல்லிணக்கத்தின் ஊடாக பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்தி எங்களுக்கு கிடைக்கும் ஆசன பலத்தை வைத்துக்கொண்டு பிரச்சினைகளுக்கு தீர்வு பெறலாம் என்ற நம்பிக்கையோடு தான் முன்னோக்கிச் செல்கிறோம்.

நாம் அன்று சொன்னதை சக கட்சிகள், சக இயக்கங்கள் ஏற்றுக்கொண்டிருந்தால் இன்றைக்கு இந்த அழிவுகள், இழப்புகள், துன்பங்கள் வந்திருக்காது.

தேசிய நல்லிணக்கம் என்பது அடிமைத்தனமான அரசியலோ/ அடிமட்டமான அரசியலோ அல்ல. நாங்கள் நாங்களாகவே இருந்து கொண்டு, எங்களுடைய அரசியல் பலத்தில் தங்கி இருந்துகொண்டு எங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதனைத் தான் தேசிய நல்லிணக்கம் என்று கூறுகின்றோம். 1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை சாதகமாகப் பயன்படுத்தி இருந்தோமானால் இன்றைக்கு முள்ளிவாய்க்கால் வந்திருக்காது.

இடப் பெயர்வுகள், இரத்தம் சிந்தல்கள், உயிரிழப்புகள் மற்றும் சொத்திழப்புக்கள் ஏற்பட்டிராது இன்றுஇருக்கும்நிலையை விட பல மடங்கு முன்னேற்றகரமான சூழலில் வாழ்ந்திருப்போம்.

இரத்தம்சிந்தாமல் வியர்வை சிந்தி உயிர் மற்றும் உடைமைகளை இழக்காத பாதுகாப்பான முன்னேற்றமே எமக்குத்தேவை.

தலைவன் என்றால் தன்னையும் பாதுகாக்க வேண்டும், மக்களையும் பாதுகாக்க வேண்டும். அதுவே சரியான தலைமையாக இருக்க முடியும். சில தவறான தலைமை காரணமாகவும் வழி நடத்தல் காரணமாகவும் எங்களுடைய அப்பாவி இளைஞர், யுவதிகள் அநியாயமாக பலியாகிவிட்டனர். அதை நினைத்து மனவருத்தமடைகிறேன்.

அதனால் பிரயோசனமும் இல்லை என்பதனை வரலாறு நிரூபித்துள்ளது. நீங்களும் அதை உணர்வீர்கள் என நினைக்கிறேன். எதிர்காலத்தில் அவ்வாறான ஓர் சூழலை ஏற்படுத்தாமல் இருப்பதனை பாதுகாத்துக்கொண்டு முன்னோக்கிச் செல்ல இளைஞர், யுவதிகள் எங்களுடன் அணிதிரள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-30)

# கடந்தகால அனுபவத்துடன் சிந்தித்து வாக்களியுங்கள்

## சந்திரகுமார் கோரிக்கை



(அக்கராயன்குளம்)

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் கடந்த ஐந்து வருட காலத்தில் அதாவது 2015 தொடக்கம் 2020 வரையான காலத்தின் அனுபவத்திலிருந்து இனிவருகின்ற ஐந்து வருடத்திற்கான வாக்கினை அளிக்க வேண்டும் என கேடயச்சின்னத்தில் சுயேச்சைக் குழுவாக போட்டியிடுகின்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி புதுமுறிப்பு கிராமத்தில் அண்மையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2015 தொடக்கம் 2020 வரையான காலத்தில் மக்கள் வெறுமைக்குள் வாழ்ந்துள்ளனர். இக் காலத்தில்தான் ஏராளமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொண்டு அரசுக்கு ஆதரவளித்து வந்தவர்கள் மக்களை கண்டுகொள்ளவே இல்லை. கொள்கை கொள்கை என வார்த்தைக்கு வார்த்தை கூறியவர்கள் கொள்ளையடித்தார்களே தவிர கொள்கையினைக் கடைப்பிடிக்கவில்லை, மக்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றவில்லை.

மக்களின்வாக்குகளை பெற்று அதிகாரத்திற்கு வந்தவர்கள் மக்களின் வாழ்க்கையினை முன்னேற்றுவதற்கு பதிலாக தங்களை முன்னேற்றிக்கொண்டார்களே தவிர கடந்த ஐந்து வருடத்தில் வேறு எதுவும் இடம் பெறவில்லை.

மக்கள் பிரதிநிதிகள் தேர்தல் காலங்களில் மக்கள் முன் வரும் போது தங்களுடைய கடந்த காலத்தில் தங்களால் மக்களுக்கு செய்யப்பட்ட பணிகளை சொல்லி எதிர்காலத்திற்கான ஆதரவை கோரவேண்டும். ஆனால் தமிழ் அரசியல் பரப்பில் குறிப்பாக எங்கள் மண்ணில் இந்த நிலைமை இல்லை.

மேடைகளில் எதிர்த்தரப்பினர்கள் மீது அவதூறுகளை வாரி இறைத்துவிட்டு இறுதியில் எங்களுக்கு வாக்களியுங்கள் எனக் கோருகின்றனர்.

சமூகத்தில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய, மக்களின் முன்னேற்றத்தில் அக்கறையாக உள்ள வினைத்திறனான மக்கள் பிரதிநிதிகளை தங்களின் பிரதிநிதிகளாக தெரிவு செய்ய வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். (ஜ-2)

# பாரதம்

# முதல் தடவையாக ஒருநாளில்
# 2 லட்சத்து 50 ஆயிரம் தொற்ற

## உலக சுகாதார அமைப்பு தகவல்

**(ஜெனீவா)**

**உலகை மிரட்டிவரும் கொரோனா வைரஸ் பெருந்தொற்றினால் ஒரே நாளில் அதிகபட்ச பாதிப்பு நேற்று முன்தினம் பதிவாகியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.**

உலகை மிரட்டிவரும் கொரோனா வைரஸ் பெருந்தொற்றினால் ஒரே நாளில் அதிகபட்ச பாதிப்பு கடந்த 24 மணிநேரத்தில் பதிவாகியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, ஒரேநாளில் கிட்டத்தட்ட இரண்டு இலட்சத்து 60 ஆயிரம் பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்

டுள் கழ வெ ஆ பதி என இ ஏற் பல் தின டுத் க்க அத

## பிரான்ஸில் பழம்பெரும் தேவாலயத்தில் தீ


(பரிஸ்)

பிரான்ஸில் நன்ற் (Nant) நகரில், கி.பி. 15ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பழம்பெரும் தேவாலயத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இத் தீ விபத்து ஏற்பட்டதுடன் கடும் போராட்டத்துக்குப் பின்னர் தீயணைப்புத்துறை வீரர்கள் தீயை கட்டுப்படுத்தியுள்ளதாக அந்நாட்டுச் செய்திகள் தெரிவித்துள்ளன.


இந்த தீ விபத்து, திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளதுடன், இதற்கான காரணம் குறித்து தீவிரமாக விசாரித்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

பரிஸில் உள்ள நோட்ரே-டாம் தேவாலயத்தில் தீ விபத்து ஏற்பட்டு பெரும் இழப்பை ஏற்படுத்திய சம்பவத்தின் ஒரு வருடத்திற்குப் பின்னர் இவ்வாறு தேவாலயத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. (2)





## பேருந்தில் தீ



(பரிஸ்)

பிரான்ஸின் தலைநகர் பரிஸின் ஆர்லின் விமான நிலையத்தின் டெர்மினல் 4 க்கு வெளியே ஒரு பேருந்து தீப்பிடித்து எரிந்ததையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பரிஸின் ஆர்லின் விமான நிலையத்தின் டெர்மினல் 4 பகுதிக்கு வெளியே நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இடம்பெற்றது. பரிஸுக்கும் விமான நிலையத்துக்கும் இடையே பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்து ஒன்றே இவ்வாறு தீ பற்றி எரிந்துள்ளது. குறித்த பேருந்தின் ஓட்டுநர் ஆர்லி யின் விமான நிலையத்தை அண்மிக்கும் வேளை பேருந்திலிருந்து புகைத்து மணம் வருவதை உணர்ந்துள்ளார். இதனையடுத்து பேருந்தை உடனடியாக நிறுத்தி தப்பியுள்ளார்.

குறித்த தீயை கட்டுப்படுத்த 30 தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்ததையடுத்து மீண்டும் விமான நிலையம் இயல்பு நிலைக்கு திரும்பியது. கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் மூடப்பட்ட பின்னர் ஜுன் 25 அன்று ஆர்லின் விமான நிலையம் மீண்டும் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# உலகம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்திய ஜோ
# மீண்டும் அதே பாணியில் கறுப்பினத்தவரின் கழு

## பொலிஸ் அதிகாரி



(லண்டன்)

இங்கிலாந்தில் சந்தேக நபரை கைது செய்த முயற்சித்தபோது அந்த நபரின் கழுத்தை காலால் நெரித்த பொலிஸ் அதிகாரி பணி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் மினியாபொலிஸ் நகரில் கடந்த மே மாதம் கடையில் கள்ள நோட்டு கொடுத்ததாக ஜோர்ஜ் பிலாய்டு என்ற கறுப்பினத்தவரை பொலிஸார் கைது செய்ய முயற்சித்தனர்.

அப்போது ஒரு பொலிஸ் அதிகாரி ஜார்ஜின் கழுத்தில் தனது முழங்காலால் அழுத்தி அவரை எழுந்திருக்க முடியாமல் செய்தார். குரல்வளை நெரிக்கப்பட்டதால் 'என்னால் மூச்சு விட முடியவில்லை' என கதறிய ஜோர்ஜ் அந்த இடத்திலேயே மூச்சுத்திணறி பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. பல நாடுகளில் 'பிளாக் லிவ்ஸ் மேட்டர் பதாகைகளுடன் நடைபெற்ற இந்தப் போராட்டம் பல்வேறு பரிணாமங்களில் உருவெடுத்து வருகிறது. இந்நிலையில் ஜோர்ஜ் பிலாய்டு கைது சம்பவம் போன்ற தொரு கைது சம்பவம் இங்கிலாந்தில் நடைபெற்றுள்ளது.

இங்கிலாந்து நாட்டின் தலைநகர் லண்டனின் தெற்கு பகுதியில் இஸ்லிங்டன் என்ற நகரம் அமைந்துள்ளது. அ நகரின் இஸ்லிடோன் வீதிப்பகுதியி சிலர் மோதலில் ஈடுபடுவதாக கடந் வியாழக்கிழமை பொலிஸாருக்கு த வல் கிடைத்தது.

இந்த தகவலையடுத்து அப்பகுதிக் விரைந்து சென்ற பொலிஸார் அங் கூடியிருந்த சிலரிடம் விசாரணை நட தினர். அப்போது இங்கு நின்று கொ டிருந்தவர்களில் கறுப்பினத்தவரா ஒருவரிடம் கத்தி இருந்ததாக பொலிஸ தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து அந்த சந்தேக நப கைது செய்ய இரண்டு பொலிஸார் முய சித்துள்ளனர். கைதுக்கு அந்த நபர் ஒ துழைக்க மறுத்துள்ளார். இதனா பொலிஸார் அந்த நபரை வலுக்கட்டா மாக தரையில் தள்ளி கைது செய்ய மு பட்டனர். தரையில் விழுந்த அந்த நபரி கழுத்தில் பொலிஸ் அதிகாரி தன காலால் நெரித்துள்ளார்.

# ில் மட்டும்

# றாளர்கள்

டுள்ளதாக அமெரிக்காவின் ஜோன்ஸ் ஹொப்கிங்ஸ் பல்கலைக் கழகத் தரவுகளை மேற்கொள்காட்டி சுகாதார அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.


இந்த ஒரேநாள் பாதிப்பு, கொரோனா தொற்றுநோய் ஆரம்பித்ததில் இருந்து இற்றைவரையான காலப்பகுதியில் பதிவான அதிகூடியதும் கால் மில்லியனைத் தாண்டியதுமான எண்ணிக்கை என உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தற்போது அமெரிக்கா, பிரேசில், இந்தியா மற்றும் தென்னாபிரிக்காவில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன்ஸ் ஹொப்கிங்ஸ் பல்கலைக்கழகத்தின் எண்ணிக்கையின்படி, நேற்று முன் தினம் சனிக்கிழமை வரையான காலப்பகுதியில் உறுதிப்படுத்தப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 14 மில்லியனைக் கடந்ததுடன் ஆறு இலட்சத்துக்கும் அதிகமானோர் மரணித்துள்ளமை பதிவாகியுள்ளது. (ஐ-2)

## கொரோனா அச்சம்

# ஒரு இலட்சம் 'மின்க்' விலங்குகளைக் கொல்ல ஸ்பெயின் தீர்மானம்



(ஸ்பெயின்)

ஸ்பெயின் நாட்டில் உள்ள பண்ணையொன்றிலுள்ள ஒரு இலட்சம் மின்க் வகை விலங்குகளை கொல்வதற்கு அந்நாட்டு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கீரியைப் போலக் காணப்படும் குறித்த மின்க் வகை விலங்கு அங்குள்ள பண்ணைகளில் வளர்க்கப்பட்டு வருகிறது.


இந்நிலையில், மே மாதத்தில் ஒரு பண்ணை ஊழியரின் மனைவி வைரஸால் பாதிக்கப்பட்ட பின்னர் ஸ்பெயினின் அரகோன் மாகாணத்தில் கொரோனா தொற்று கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து, அவரது கணவர் உட்பட ஆறு பண்ணைத் தொழிலாளர்களுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

மேலும் ஜூலை 13 ஆம் திகதி அங்கு வளர்க்கப்பட்ட 87 வீதமான மின்க் வகை விலங்குகளுக்கும் கொரோனா தொற்று இருப்பது தெரிய வந்துள்ளதாக பிராந்திய கால்நடை சுற்றுச்சூழல் துறை தெரிவித்துள்ளது.

விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு தொற்று பரவுகிறதா என்று முடிவெடுக்க முடியாத நிலையில், பண்ணைகளில் உள்ள 92 ஆயிரத்து 700 மின்க் வகை விலங்குகளை கொல்ல ஸ்பெயின் அரசு உத்தரவிட்டுள்ளது.

ஸ்பெயினில் கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவத் தொடங்கியதிலிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 28 ஆயிரத்து 416 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)



# ஜார்ஜ் ஃபிலாய்ட் மரணம்

# கழுத்தை நெரித்து கைது

# ரி பணி நீக்கம்

ள்ளது. அந்
பகுதியில்
ாக கடந்த
ருக்கு தக

ப்பகுதிக்கு
ார் அங்கு
ணை நடத்
று கொண்
ந்தவரான
பொலிஸார்

தக நபரை
ஸார் முயற்
த நபர் ஒத்
இதனால்
லுக்கட்டாய
செய்ய முற்
ந்த நபரின்
ாரி தனது

அப்போது மூச்சுவிட முடியாமல் சிரமப்பட்ட அந்த நபர் எனது கழுத்தில் இருந்து இறங்குங்கள். நான் தவறாக எதுவும் செய்யவில்லை' என கூறினார். ஆனாலும், பொலிஸார் அந்த நபரை கைது செய்தனர்.

பொலிஸார் அந்த நபரின் கழுத்தில் முழங்காலை வைத்து நெரித்து கைது செய்வதை அருகில் இருந்தவர்களில் சிலர் வீடியோவாக எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவு செய்தனர். இதனால் இந்த விவகாரம் இங்கிலாந்தில் பூதாகரமானது.

இந்நிலையில், கைது நடவடிக்கையின் போது விதிமுறைகளுக்கு மாறாக செயற்பட்டு சந்தேக நபரின் கழுத்தை முழங்காலால் நெரித்த பொலிஸ் அதிகாரி பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இந்த கைது சம்பவத்தின் போது அருகில் இருந்த மற்றொரு பொலிஸ் பணி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மேலும், இந்த சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (2)

# பேருந்து-கார் நேருக்கு நேர் மோதல் 6 பேர் உயிரிழப்பு; 40 பேர் படுகாயம்

(டில்லி)

டில்லியில் இருந்து பீகார் சென்று கொண்டிருந்த பேருந்து கார் மீது மோதிய பயங்கர விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.40 பேர் படுகாயமடைந்தனர்.

டில்லியில் இருந்து பீகார் நோக்கி தனியார் பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. நேற்று காலை ஐந்து மணியளவில் பேருந்து உத்தர பிரதேச மாநிலம் ஆக்ரா - லக்னோ எக்ஸ்பிரஸ் சாலையில் வந்து கொண்டிருந்தபோது, கண்ணிமைக்கும் நேரத்திற்குள் கார் மீது பயங்கரமாக மோதியது.

மோதிய வேகத்தில் பேருந்தும், காரும் சாலையோரம் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்தன.

இந்த கோர விபத்தில் 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 40 பேர் படுகாயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (2)

# ஆளுநரை விடுவிக்கக்கோரி ரஷ்யாவில் தொடரும் போராட்டம்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் 15 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த கொலையில் தொடர்புடையவர் எனும் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள மாகாண ஆளுநரை விடுதலை செய்யக் கோரி ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ரஷ்யாவின் ஹபர்ஸ்வோக் மாகாண ஆளுநராக செயற்பட்டு வரும் செர்ஜி ப்ர்ஜர், 2018ஆம் ஆண்டு நடந்த மாகாண ஆளுநர் தேர்தலில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் ஆதரவு பெற்ற வேட்பாளரை தோற்கடித்து பெரும் வெற்றி பெற்றார்.

இந்நிலையில், 15 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த தொழிலதிபர்கள் கொலைச்சம்பவங்களில் செர்ஜிக்கு தொடர்பு இருப்பதாக கூறி பொலிஸார் கடந்த வாரம் அவரை கைது செய்தனர்.

இந்தக் கைது சம்பவம் அம்மாகாணத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனையடுத்து, ஆளுநருக்கும் 15 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த கொலைகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை எனவும் ஜனாதிபதி புடினின் ஆதரவு பெற்ற வேட்பாளரை தோற்கடித்ததால் வேண்டுமென்றே செர்ஜி கைது செய்யப்பட்டதாகவும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்நிலையில், ஆளுநர் செர்ஜி கைது சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அவரை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையுடன் கொரோனா பரவலுக்கு மத்தியில் ஹபர்ஸ்வோக் மாகாண மக்கள் ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த கைது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக நடைபெற்றுள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேலும் ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு எதிராகவே இந்தப் போராட்டங்கள் பெரும்பாலும் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் போராட்டம் 8ஆவது நாளாக தொடர்ந்தும் நடைபெற்று வருவதால் ரஷ்யாவில் பரபரப்பான சூழல் நிலவி வருகிறது.

இதேவேளை, ஆளுநர் செர்ஜி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் ஒரு வேளை நிரூபிக்கப்பட்டால் அவர் வாழ்நாள் முழுவதும் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# சில்லறை விலைகள் தன்னிச்சையாக அதிகரிப்பு; 5 மருந்தாக்கல் நிறுவனங்களின் பதிவு இரத்து

(கொழும்பு)

**நாட்டின் 5 மருந்தாக்கல் நிறுவனங்களின் பதிவுகளையும், இறக்குமதி அனுமதிகளையும் இரத்துச்செய்யும் அறிவித்தலை இலங்கை தேசிய மருந்தாக்கல் ஒழுங்கமைப்பு அதிகார சபை வெளியிட்டுள்ளது.**

இந்த மருந்தாக்கல் நிறுவனங்கள் சுமார் 10 மருந்துப்பொருட்களின் சில்லறை விலைகளை தன்னிச்சையாக அதிகரித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.இது தொடர்பில் இலங்கையின் தேசிய மருந்தாக்கல் ஒழுங்கமைப்பு அதிகாரசபையின் சட்ட அலுவலர் புஸ்பமாலா ஹெட்டியாராச்சி தகவல் வழங்கியுள்ளார்.

குறித்த 5 நிறுவனங்களும் கடந்த சில மாதங்களாக மருந்துகளின் சில்லறை விலைகளை தன்னிச்சையாக அதிகரித்தன. இது அதிகார சபையின் பதிவு தொடர்பான சட்டங்களை மீறிய செயலாகும்.

அதுவும் கொரோனா வைரஸ் தொற்று நேரத்தில் நோயாளிகளின் சிரம நிலைக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட தண்டனைக்குரிய குற்றமாகும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# சட்டத்திற்குப் புறம்பான சொத்துக்களை பறிமுதல் செய்ய புதிய பொலிஸ் பிரிவு

(கொழும்பு)

சட்டத்துக்குப் புறம்பான சொத்துக்கள் மற்றும் அறிவுசார் சொத்து விசாரணை பிரிவு என்ற புதிய பொலிஸ் பிரிவை நிறுவ பொலிஸ் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இந்தப் புதிய பொலிஸ் பிரிவு தொடர்பாக சுற்றறிக்கை ஒன்றை பதில் பொலிஸ்மா அதிபர் சந்தனா விக்ரமரத்ன வெளியிட உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்



தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

இந்த புதிய பொலிஸ் பிரிவின் முக்கிய செயற்பாடுகளாக பயங்கரவாத அமைப்புகளுக்கு சொந்தமான சொத்துக்களை அடையாளம் கண்டு பறிமுதல் செய்வது, பண மோசடி மற்றும் போதைப் பொருள் கடத்தல் ஆகியவற்றிலிருந்து சம்பாதித்த பணம் மற்றும் அவற்றால் கிடைத்த சொத்துக்களைப் பறிமுதல் செய்வதாகும்.

குற்றவியல் விசாரணைப் பிரிவின் (சிஐடி) பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் இந்த புதிய பொலிஸ் பிரிவு அமைக்கப்பட உள்ளது. (ஜ-4)

# இராவணன் பற்றிய ஆவணங்கள் கோரல்

(கொழும்பு)

இராவணன் மற்றும் ஆகாயமார்க்கமாக இழக்கப்பட்ட புராதன தொல்பொருள் உரிமைகள் தொடர்பில் ஆய்வுகளை ஆரம்பிக்கவிருப்பதாகவும், அதற்கு உதவக்கூடிய வகையில் இராவணன் பற்றிய வரலாற்று நூல்கள் மற்றும் ஆவணங்கள் இருப்பின் மக்கள் அவற்றைத் தந்துதவ முடியும்என்றும்சுற்றுலாத்துறைமற்றும்விமான சேவைகள் அமைச்சின் கீழான இலங்கைவிமான சேவைகள் அதிகாரசபை அறிவித்துள்ளது.

இதுபற்றி விமான சேவைகள் அதிகாரசபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலில் ,

விமானசேவைகள் அதிகாரசபையின் சுற்றாடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் “இராவண அரசன் மற்றும் ஆகாயமார்க்கமாக நாம் இழந்த புராதன தொல்பொருள் உரிமைகள்” என்ற விடயம் தொடர்பான ஆராய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன் முதற்கட்டமாக இராவண அரசன் பற்றிய வரலாறு மற்றும் தரவுகள், அவை பற்றிய புத்தகங்களைச் சேகரிப்பதற்கு அதிகாரசபை தீர்மானித்துள்ளது. எனவே இராவணன் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய ஆவணங்களை எமக்குத் தந்துதவுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

அவ்வாறு வரலாற்று ஆவணங்களைத் தந்துதவ விரும்பும் பட்சத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக 076 6317110 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமாகவோ அல்லது mgr rdpShcaa.lk என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாகவோ அது குறித்துத் தகவல் தரப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறு எம்மிடம் தரப்படும் வரலாற்று நூல்கள் மற்றும் ஆவணங்களுக்காகப் பொருத்தமான தொகை கொடுப்பனவாக வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# 3 மாடியிலிருந்து குதித்து நபரொருவர் தற்கொலை

(கொழும்பு)

மத்தேகொட- சமகி உயன பகுதியில் மூன்று மாடிக் கட்டடமொன்றில் இருந்து குதித்து நபரொருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் மத்தேகொட பிரதேசத்தை சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை குறித்த நபர், தனது உறவினர் ஒருவரின் வீடொன்றுக்கு சென்றுள்ளார். பின்னர் வீட்டின் மேல் மாடியில் உறவினர்களுடன் பேசிக்கொண்டிருந்த அவர், திடீரென குதித்து தற்கொலை செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் சம்பவத்தில் உயிரிழந்தவர் மனநோயால்பாதிக்கப்பட்ட ஒருவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.(ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இசை மருத்துவம்

மனம் சரியில்லை என்றால் உடனே சில பேர் சங்கீதத்தைக் கேட்க ஆரம்பிப்பது வழக்கம்.மனதை சரி பண்ணுவதற்கு அது ஒரு நல்ல வைத்தியம் தான். ஏனென்றால் இன்றைக்கு மன நோயாளிகளுக்கே சங்கீதத்தை ஒரு வைத்தியமாக உபயோகிக்கின்றார்கள். மனநோய்க்கு எத்தனையோ விதமான சிகிச்சை முறைகள் உண்டு.

Psychotherapy – என்று ஒன்று இது மனோதத்துவ சிகிச்சை.

Hyphotherapy – என்று ஒன்று இது மனோவசிய சிகிச்சை.

Recreation Therapy – என்று ஒன்று இது மனமகிழ்ச்சி சிகிச்சை.

இதைத் தவிர அதிகபடியான உணர்ச்சிகளுக்கு யோக சிகிச்சை உபயோகிக்கப்படுகின்றது.இதை எல்லாம் விட சிறந்த பலனைக் கொடுக்கக்கூடிய ஒரு சிகிச்சை முறை – Music Therapy – இசை சிகிச்சை. இசையினாலே நோய்கள் குணமாகும் என்கின்றது பழங்காலத்திலே இருந்து கொண்டு வருகின்ற ஒரு நம்பிக்கை. அது மட்டுமல்ல என்னென்ன ராகம் என்னென்ன நோயைக் குணப்படுத்தும் என்று வேற சொல்லுகின்றார்கள்.

இதற்கெல்லாம் தெளிவான விஞ்ஞான நிருபணம் இல்லை என்றாலும் கூட இதெல்லாம் இப்பவும் ஆராய்ச்சிக்குரிய விடயங்கள். இதைப்பற்றி எல்லாம் மேற்கொண்டு நிறைய ஆராய்ச்சி செய்து நிறைய கண்டுபிடிக்கலாம். அதை எல்லாம் சிறப்பாக உபயோகப்படுத்தலாம்.

இந்தோளம்–என்கின்ற ராகம் வாதநோய்க்கு நல்லதாம்.

சாரங்கா–ராகம் பித்தம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு நல்லதாம்!

அசாவேரி ராகம் தலைவலியை குணப்படுத்துமாம்! நீலாம்பரி ராகம் இருக்கு பாருங்கள் அது உடல் இறுக்கத்தையும் மன இறுக்கத்தையும் போக்கி எங்களைத் தூக்கத்திலே ஆழ்த்தக்கூடிய ராகம்.பிலகரி, பூபாளம் , நாட்டை இதெல்லாம் எங்களுடைய தூக்கத்தைக் கலைத்து கண்விழிக்கச் செய்யக்கூடிய ராகங்கள். கவலை – பசி இது இரண்டையும் மறக்க வேண்டுமா? இதற்கு கரகரப்பிரியா ராகம்,சோக உணர்வைக் தரக்கூடிய ராகங்கள்:முகாரி, சிவரஞ்சனி, ரேவதி.

அதிர்ச்சி, பாதிப்பு, பரபரப்பு இதையெல்லாம் போக்கி மன அமைதியைத்தரக் கூடிய ராகங்கள் மத்யமாவதி, சகானா. இசை –இருக்கே இது கேட்கிறவர்களுக்கு மட்டும் தான் நல்லது செய்கின்றது என்று இல்லை..அதைப் பாடுகின்றவர்களுக்கும் பயிற்சி செய்பவர்களுக்கும் கூட நல்லது செய்கின்றது. பாடுகின்றவர்களுக்கு எல்லாம் இரத்த ஓட்டம் சீரடையும், முகத்திலே புதுக்களை உண்டாக்கும், தோலின் சுருக்கங்கள் நீக்கும், இளமையான தோற்றப்பொலிவு உண்டாக்கும். அதனாலே தான் சங்கீத வித்துவான்கள் பல பேரைப் பாருங்கள் பார்ப்பதற்கு உசாராக இருப்பார்கள். முகம் நல்லா இருக்கும்.பாடுகின்ற போது தான் ஒரு மாதிரியாக இருக்கும்....அது பரவாயில்லை எல்லோருக்கும் அப்படி இருக்காது.இசையை சங்கீத யோகம் என்று சொல்லுவார்கள்.ஏனென்றால் யோகப் பயிற்சிக்கும் இதற்கும் சம்பந்தம் உண்டு.


ராக ஆலாபனை செய்கின்ற போது உள்ளே இழுக்கின்ற மூச்சு அங்கேயே கொஞ்ச நேரம் இருக்கும். பிறகு தான் வெளியே வரும். அது பிராணாயாமம் மாதிரி.ஆரோகணம் – அவரோகணம் பாடுகின்ற போது எல்லாம் மூச்சை இழுத்து படிப்படியாக வெளியே விடவேண்டி இருக்கு இல்லையா? அதெல்லாம் யோகப் பயிற்சி மாதிரித் தான். இதைத் தவிர இசைக் கருவிகள் இருக்கு பாருங்கள்.அதைப் பற்றியும் சில சொல்லுகின்றார்கள். வீணையின் நாதம் இரத்தக் கொதிப்புக்கு நல்லதாம்.அதிக படியான இரத்த அழுத்தத்தைக் குறைத்து மனதிற்கு அமைதியைக்கொடுக்குமாம், புல்லாங்குழல், நாதஸ்வரம் இதெல்லாம் கவலையாலே ஏற்படுகின்ற நோய்களைக் குணப்படுத்தி மனதிலே மகிழ்ச்சியைப் பெருக்குமாம்.

மிருதங்கள் மர்திரியான தாள வாத்தியங்கள் எல்லாம் மனத்தளர்ச்சி, மனச்சிதைவு இதையெல்லாம் குணப்படுத்துமாம். மறதியைப் போக்குமாம் , ஞாபகசக்தியைப் பெருக்குமாம்.இப்படி என்னென்னவோ சொல்கின்றார்கள்.அதனாலே இதைப்பற்றி எல்லாம் நிறைய ஆராய்ச்சி செய்தால் துல்லியமான விடயங்களை தெரிந்து கொள்ளலாம். இந்தத் தகவலை என்னுடைய நண்பன் ஒருவனிடம் சொல்லிக்கொண்டு இருந்தேன். அவனுக்கு சங்கீதம் என்றால் என்னவென்றே தெரியாது.அவன் ஒருநாள்அவசரமாக என்னைத் தேடி வந்தான். சேர்!வீணை இசை இரத்தக் கொதிப்பைக் குறைக்கும் என்று நீங்கள் சொல்லுகின்றீர்கள். ஆனால் எங்கள் பக்கத்து வீட்டிலே ஒரு வீணை வித்துவான் இருக்கின்றார். நேற்று அவருக்கு இரத்தக் கொதிப்பு திடீர் என்று ஏறிப்போய் விட்டது தெரியுமா? என்றான்.எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

“ நேற்றைக்கு என்ன நடந்தது அவர்கள் வீட்டிலே அவர் வீணை வாசிச்சாரா? ” என்று கேட்டேன்.இல்லை சேர் அவர் வீணையை எடுத்து நான் வாசித்தேன் என்றான்.இவன்!

# ஆடி அமாவாசையில் பிதிர் வழிபாடு செய்து வாழ்வாங்கு வாழ்வோம்

சூரிய சந்திரர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியில் சஞ்சரிக்கும் புனிதமான நாள் அமாவாசையாகும். அத்துடன் தேவர்களும் அமாசையில் அதிபர்களாக உள்ளனர். பூமியில் உள்ளவர்களை பொறுத்தமட்டில் ஒவ்வொரு அமாவாசையும் பிதிர்க்கருமத்துக்கு அதாவது தென்புலத்தார் வழிபாட்டுக்கு மிக உகந்த நாள். சூரிய மண்டலத்துக்கு அப்பால் தென் மண்டலத்தில் பிதிர்கள் உறையும் பிதிர் லோகம் உள்ளது.



பிதிர்களை தென்புலத்தார் என்று அழைப்பது தமிழர்கள் மரபு. தென்புலத்தார் வழிபாடுகள் எள்ளும் தண்ணீரும் இறைத்தல். பிண்டம் போடுதல் என்பவை பழந்தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தவை. அமாவாசையில் விரதமிருந்து இந்த கருமங்களை ஆற்ற வேண்டும்.

### பிதிர் வழிபாடு அவசியம் செய்ய வேண்டும்

ஆடி அமாவாசை பிதிர் கருமங்களுக்கு மிகவும் உகந்தது என்றும் பிதிர் வழிபாடு செய்ய வேண்டியவர்கள் தவறாது ஆடி அமாவாசை செய்ய வேண்டும் என்று நூல்கள் எடுத்து உரைக்கின்றன. பிதிர் தர்ப்பணத்துக்கு மிகவும் ஏற்றது ஆடி அமாவாசை என்பது இந்துக்களின்கொள்கை.

### முன்னோர்களுக்கு முக்தியளிக்க வேண்டுதல்

ஆடி அமாவாசைத் தினத்தில் கடல், நதி, வாவி போன்ற தீர்த்தங்களில் நீராடினால் பழைய வினைகள் அறும் என்றும் பாவங்கள் நீங்கும் என்றும் கூறுவர். தீர்த்தங்களை இறைவனின் அருள் என்றும் கூறுவர். தீர்த்தங்களை இறைவனின் அருள் செறிந்த நீராக நினைந்து முன்னோர்கள் பிதிர்களை எண்ணி அவர்களின் பாவங்களைப் போக்கி அவர்களுக்கு முத்தியளிக்கும் படி இறைவனை வேண்ட தீர்த்தமாடுதல் வேண்டும்.

### பிதிர்வழிபாடே வாழ்வாங்கு வாழ வைக்கும்

அமாவாசை பௌர்ணமி தினங்களில் கடல் பொங்கியெழும் நிலை உண்டு. இவ்வாறே இந்தத் தினங்களால் மனித மன உணர்வுகளிலும் மாறுதல்கள் நிகழ்வதாக கூறப்படுகிறது. எனவேதான் அமாவாசை போன்ற கனத்த நாட்கள் மிக அவதானமாக கழிக்கப்பட வேண்டுமென்றும் இந்த நாட்களில் வேறு காரியங்களை செய்யாது மனங்களை புலன்கள் வழிச் செல்ல விடாதும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் ஆன்றோர்கள் கூறி வைத்தனர். இந்தத் தினங்களில் கடவுள் வழிபாடு, பிதிர் வழிபாடு என்பவற்றை செய்து நல்ல பயனைப் பெறுவது முறையாகும்.

### பிதிர்களை திருப்தி செய்து மகிழ்வித்தல்

ஆடி அமாவாசையில் தீர்த்தமாடுதல் பிதிர் வழிபாடு செய்தல், தர்ப்பணம், பிண்டதானம் நிறைவேற்றுதல் என்பவை ஆண்டு தோறும் கீரிமலை நகுலேஸ்வரத்திலும், மட்டக்களப்பு அமிர்த கழி மாமாங்கேஸ்வரத்திலும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு வேறும் பல சிவத்தலங்களிலும் இந்த நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

நாங்கள் நோயின்றி சுகமாக வாழவும் சகல செல்வங்களையும் பெற்று இனிதாக வாழவும் தெய்வங்களை ஆராதிக்கின்றோம். அதற்கு பிதிர்களையும் திருப்தி செய்து மகிழ்விக்க வேண்டும். இவற்றுக்குரிய விதி முறைகளையெல்லாம் நமது முன்னோர்கள் எழுதி வைத்துள்ளனர். பராசர் மனு விகுதர், சாதாதபர் போன்ற இருடிகள் எழுதி வைத்தவைகள் யாவும் சேர்த்து "தர்மசாஸ்திர நிபந்தனை" எனும் சிறந்த நூலாக தொடுக்கப்பட்டுள்ளது.

### தட்சணாயன தொடக்கம் இறை வழிபாட்டிற்குரிய நாட்கள்

தட்சணாயன தொடக்க மாதம் ஆடி என்பதால் பிதிர்க்காரியங்களுக்கு ஆடி மாதம் சிறப்பானது எனக் கொள்ளப்படுகிறது. ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசைத்திதி பிதிர் வழிபாட்டுக்கு புண்ணியமான தினம் என சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. இத்தகு புண்ணிய காலமாக இன்று இந்துக்களால், தமிழர் பிரதேசமெங்கும் பிதிர்க்கடன் நிறைவேற்றி ஆடி அமாவாசை விரதம் நிறைவேற்றப்படுகிறது.

வடபுலத்தில் தமிழர்களின் வரலாற்றுப் பெருமைகளை தன்னகத்தே கொண்டு விளங்கும் ஈஸ்வரங்களிலொன்றான நகுலேஸ்வரத்தில் (கீரிமலை சிவன் கோவில்) கீரிமலை எனும் புனித கங்கையில் பல்லாயிரக் கணக்க இந்துக்கள் பிதிர்த்தர்ப்பணம் செய்து கொள்வர்.

**செந்நாப்புலவர் - மதுரகவி.
காரை எம்.பி.அருளானந்தன்**

# அல்கொய்தா உறுப்பினரை கைது செய்ய விடாமல் தடுத்தார் ரணில்



## விஜயதாஸ பகீர் குற்றச்சாட்டு



**(கொழும்பு)**

**முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐந்து அரசியல்வாதிகள், அன்றைய பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர மீது கடுமையான அழுத்தம் கொடுத்ததைத் தொடர்ந்து, கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டுக்குள் பிரவேசித்த மொஹமட் றிப்கான் என்ற அல்கொய்தா உறுப்பினர் கைது செய்யப்படவில்லை என முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.**

ரணிலை தவிர, முன்னாள் அமைச்சர்கள் றிசாத் பதியுதீன் மற்றும் டாக்டர் ராஜித சேனாரட்ன, முன்னாள் ஆளுநர்கள் அசாத் சாலி, எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஆகியோரே அந்த ஐந்து அரசியல்வாதிகள் எனவும் அவர் சுட்டிக்காடடியுள்ளார்.

இத்தகைய தகவல்களை உயிர்த்த ஞாயிறு, பயங்கரவாத தாக்குதல் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணையத்திற்கும் (பிசிஓஐ) வெளிப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அந்த ஆணையத்தில் தான் சமர்ப்பித்த விபரங்கள் இது வரை நிராகரிக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் முன்னாள் துணை பணிப்பாளர் நாலக டி சில்வா, அந்த ஆணைக்குழு முன் சாட்சியங்களை அளித்து, ஜூலை 16 அன்று, அன்றைய பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, அல்-கொய்தா உறுப்பினரை கைது செய்ய வேண்டாமென அறிவுறுத்தியதாக கூறினார் என்பதையும் இவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

## தேர்தல்கள் ஆணைக்குழுவில் கொரோனா மத்திய நிலையம்



(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவில் கொரோனா மத்திய நிலையமொன்று செயற்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்காக சுகாதாரப் பிரிவின் அதிகாரிகள், மருத்துவர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அனைவரையும் பங்களிப்பு செய்வதற்கு எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இந்த மத்திய நிலையம் இன்று முதல் செயற்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

26

## கலாநிதி முருகர் குணசிங்கம்

1975 இற்குப் பின்னர், 'தென் ஆசியர்கள்' (South Asian) என்ற சிறு பிரிவிற்குள் சேர்க்கப்பட்டு இருக்கின்றது. அப்பிரிவில் இருந்து, இலங்கை மக்கள் பற்றிய அல்லது இலங்கைத் தமிழர்கள் பற்றிய கணக்கை அறிய முடியவில்லை.

2010 ஆம் ஆண்டுக்கான அமெரிக்காவின் தென் ஆசிய மக்கள் தொகை பற்றிய புள்ளி விபரங்களையும் அமெரிக்காவின் புள்ளிவிபரப் பணியகத்தின் கீழ் இயங்கும் அமெரிக்காவின் தரவுகள் கண்டுபிடிப்பு (American fact Finder) மூலம் பெறப்பட்ட மக்கள் தொகைக் கணப்பீடு UNHCR புள்ளி விபரங்கள் மூலமும் பல ஆய்வு அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகளையும் ஒப்பிட்டு அலசிப் பார்க்கின்ற ஓர் ஆய்வு முயற்சியை முடிந்தளவு மேற்கொண்டபோது, எவ்வளவு ஈழத்தமிழர்கள் வட அமெரிக்காவில் இருக்கின்றனர் என்பதைப் பெருமளவில் அறிய முடிந்தது.

மேற்படி ஆய்வுகளின்படி சுமார் 40,000 இற்கும் 45,000 இற்கும் இடைப்பட்ட தொகையில் அமெரிக்காவில் ஈழத்தமிழர்கள் வாழ்கின்றார்கள் என்ற முடிவுக்கு வர முடிந்தது UNHCR புள்ளி விபரப்படி, மேற்படி தொகையில் கடந்த பத்து ஆண்டுகளுக்குள் ஆண்டுதோறும் 1300 ஈழத்தமிழர்களுக்கு அகதிகள் அந்தஸ்து வழங்கப்பட்டு இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

2009 புள்ளி விபரங்களின்படி ஈழத்தமிழர்கள் நியூயோர்க் (New York), கலிபோர்னியா (California), மேரிலாண்ட் (Mary Land) நியூஜேர்சி (New Jersey), ரெக்ஸாஸ் (Texas) ஆகிய நகரங்களில் செறிந்து வாழ்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் குறிப்பிடத்தக்க அளவு ஈழத்தமிழர்கள் போஸ்டன் (Boston), சிகாகோ (Chicago), லொஸ் ஏஞ்சல்ஸ் (Lod Aneles) மியாமி (Miami), நெவார்க் (Newark) நகரங்களிலும் வாழ்ந்து வருகின்றார்கள்.

எனினும் நியூயோர்க் நகரில்தான் அதிகளவு ஈழத்தமிழர்கள் செறிவாக வாழ்ந்து வருவதாகப் புள்ளி விபரங்கள் காட்டி நிற்கின்றன.

### கனடா

கனடாவும் இலங்கையும் பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாடுகள் ஆகும். இவ்விருநாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர பொருளாதார உறவுகள் 1950களில் இருந்து தொடர்ந்து வருகின்றன.

1960களில் கனடாவின் குடிவரவுக் கொள்கையில் சீர்திருத்தம் கொண்டு வந்ததன் விளைவாக இலங்கையர்கள் கனடாவிற்குச் செல்வதற்கான வழிகள் திறக்கப்பட்டன.

மேலும் 1966 இல் வெள்ளை அறிக்கை (White Paper) மூலம் படித்த இலங்கையர்கள் புள்ளிகள் அடிப்படையில் கனடா செல்வதற்கான கொள்கை வகுக்கப்பட்டது.

இதன் விளைவாக படித்த தமிழர்கள் திறமை அடிப்படையில் கனடா செல்ல முடிந்தது. 1968 இல் கனடாவின் "பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம்" (Canadian International Development Agency) தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து ஈழத் தமிழ் இளம் தலைமுறையினரின் கல்வி வளர்ச்சிக்குத் தனது உதவிக் கரங்களை நீட்டி வருகிறது.

1971 இல் அறிமுகப்படுத்தப்பட்ட பல்லினக் கலாசாரக் கொள்கை (Multi cultural Policy)யும் குறிப்பிடத்தக்க கல்வி கற்ற ஈழத்தமிழர்களைக் கனடாவிற்குச் செல்லத் தூண்டியது.

1976 இல் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்சார் குடிவரவுக் கொள்கையும் (Labour Migration Policy) அதே ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட அகதிகளை ஏற்றுக்கொள்வதற்கான சட்டம் அதாவது ஒரு நாட்டின் அரசியல், மத நடவடிக்கைகளால் துன்பப்படும் அகதிகள் துன்பங்களுக்கு ஆளானவர்கள், புலம்பெயர்ந்தவர்கள், நெருங்கிய குடும்ப அங்கத்தவர்கள், நெருங்கிய உறவினர்கள் ஆகியோர் கனடா சென்று அகதி அந்தஸ்துக் கோரும் வாய்ப்புகளால் பல ஆயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் கனடா செல்ல முடிந்தது.



மேலும் ஆங்கிலமொழி பாவனையில் இருக்கும் நாடு நல்ல தொழில், கல்வி வாய்ப்பு, மருத்துவ வசதி, ஓய்வூதியத்திட்டம் போன்ற பல்வேறு காரணிகள் ஈழத்தமிழர்களைப் பெருமளவில் கனடாவை நோக்கி இழுக்கும் காரணிகளாக அமைந்தன.

1980களில் இருந்து இலங்கையில் ஏற்பட்ட ஈழத்தமிழருக்கு எதிரான தள்ளும் காரணியாக அமைந்தது. பெருந்தொகையிலான ஈழத்தமிழ் அகதிகள் கனடாவிற்குச் சென்று அகதி அந்தஸ்து கோரும் நிலைமை தொடங்கியது.

1989 ஆம் ஆண்டு குடிவரவுக் கொள்கையில் சீர்திருத்தம் செய்யப்பட்டு அதே ஆண்டில் அகதிகளுக்கான சபை (Refugees Board) நிறுவப்பட்டது.

ஈழத்தமிழ் அகதிகளில் 85 விழுக்காட்டினர் அதே ஆண்டில் அகதி அந்தஸ்துப் பெற்று கனடாவில் நிரந்தரமாக வாழ வழி செய்யப்பட்டது.

சுமார் 26,500 இற்கும் மேலான ஈழத்தமிழர்கள் இக்காலகட்டத்தில் அகதி அந்தஸ்து பெற்றனர். போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் 2004 இல் ஆழிப் பேரலைத் தாக்குதலின்போது (Tsunami) பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களின் மறு வாழ்வுக்கும் கனடா பல உதவிகளைச் செய்தது.

இதுவரை ஆய்வில் இடம்பெற்ற நாடுகள் போல கனேடிய அரசும் இன அடிப்படையில் மக்கள் தொகை கணக்கு பதிவு செய்வது இல்லை என்பது இந் நூலாசிரியர் 2014 ஏப்ரல் நடுப்பகுதியில் ரொரண்டோவில் மக்கள் தொகைக் கணக்கெடுக்கும் அலுவலகத்திற்குச் சென்று ஆய்வு நடத்தியபோது தெரிய வந்தது.

ஆனால் கனடாவின் மக்கள் தொகைக் கணக்கில் இலங்கைக்குரிய மொத்த மக்கள் தொகை ஓரளவு கணக்கிடப்பட்டு உள்ளது. 2006 ஆம் ஆண்டுக் கணக்கின்படி ஆண், பெண் பிரிவுகளில் (Sex) எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி மொத்தமாக 136,975 தமிழர்கள் ஆண், பெண் என்ற பகுதியில் பதிவாகி இருக்கின்றனர்.

இதில் இந்தியத் தமிழர்களும் அடங்குவர். ஆனால் அதே ஆண்டு பொதுவான மக்கள் தொகைப் புள்ளி விபரப்படி 103,000 இலங்கையர்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

2011 இன் தேசியக் குடும்ப மதிப்பீட்டின்படி (National Household Survey) 179,465 பேர் தமிழ் மொழியை வீட்டில் பேசுபவர்களாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி கணக்கெடுப்புத் தவறான தரவுகளையே தருகின்றது.

தமிழ்ப் பெற்றோரின் குழந்தைகள் அதாவது இரண்டாவது தலைமுறையினர் தங்களைக் கனேடியக் குடிமக்கள் என்றும் வீட்டில் பேசும் மொழி ஆங்கிலம் எனவும் பதிவு செய்து இருக்கின்றார்கள்.

எனவே மேற்படி பால் மற்றும் மொழி அடிப்படையிலான தமிழ் மக்கள் தொகை விபரத்தைக் காட்டிலும் இரண்டு அல்லது மூன்று மடங்கு கூடுதலாகவே ஈழத் தமிழர்கள் இருக்கக்கூடும்.

கனடாவிற்கான இலங்கைத் தூதுவர் அலுவலக எண்ணிக்கையின்படி 2012 இல் 300,000 இற்கு மேற்பட்ட இலங்கையர்கள் கனடாவில் இருப்பதாகத் தெரிகிறது.

இந்த அறிக்கையிலும் இரண்டாவது தலைமுறையினர் உள்ளடக்கப்பட்டு இருக்கின்றனரா? என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. மேலும் கங்குலி ஆய்வுக்கட்டுரையில் 2001 இல் சுமார் 400,000 ஈழத்தமிழர்கள் அங்கு வாழ்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பல புலமைசார் ஆய்வுகளின்படியும் தமிழர் சார்ந்த சமூக நிறுவனங்களிடம் பெறப்பட்ட தரவுகளின்படியும் சுமார் 300,000 முதல் 350,000 ஈழத்தமிழர்கள் கனடாவில் வாழ்வதாகத் தெரிய வருகின்றது.

மேற்படி மாறுபட்ட மக்கள் தொகை பற்றிய புள்ளி விபரங்களைப் பார்க்கும் பொழுது கனடாவில் எவ்வளவு ஈழத் தமிழர்கள் வாழ்கின்றார்கள் என்று கணக்கிடுவது கடினமான விடயம் ஆகும்.

ஆனாலும் மேற்படித் தரவுகளின் அடிப்படையில் சுமார் மூன்றரை இலட்சத்திற்கு மேல் கனடாவில் ஈழத்தமிழர்கள் வாழ்கின்றார்கள் என்ற முடிவுக்கு வரக்கூடியதாக உள்ளது.

இலங்கைத் தமிழர்கள் அதிகமாக வாழும் இடங்களாக ரொரண்டோ (Toronto), மொன்றியல் (Montral), வன்கூவர் (Vancouver), கலிபக்ஸ் (Halifax), எட்மொன்ரன் (Edmonton) ஆகிய இடங்கள் காணப்படுகின்றன.

ஈழத்துக்கு வெளியே அதிக அளவில் ஈழத்தமிழர்கள் வாழுகின்ற நாடுகளுள் கனடா முதல் இடத்தைப் பிடித்து உள்ளது என்பது இதுவரை ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட நாடுகளின் மக்கள் தொகைக் கணிப்பீட்டு அடிப்படையில் துணிந்து கூறக் கூடியதாக உள்ளது.

எனவே இதுவரை ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பதினாறு நாடுகளைத் தவிர ஸ்பெயின், போர்த்துக்கல், ரஷ்யா, புருனே, தென்னாபிரிக்கா மேலும் சில ஆபிரிக்க நாடுகளிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் தொழில் புரிவதற்காக பல நூற்றுக்கணக்கான ஈழத் தமிழர்கள் அங்கு சென்று வாழ்கின்றார்கள்.

இந்நாடுகளில் முதற் குறிப்பிட்ட மூன்று நாடுகளில் உள்ள தமிழர்கள் அந்த நாடுகளிலேயே அநேகமாகத் தங்கி விடுவார்கள் என எதிர்பார்க்கலாம்.

ஏனைய மற்ற நாடுகளில் தொழில் புரிபவர்கள் விரும்பியோ விரும்பாமலோ இலங்கைக்குத் திரும்பிச் செல்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இல்லை என்றே கூற வேண்டும்.

(தொடரும்)

# பாராளுமன்றத் தேர்தல் - 2020

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்

## சர்வதேசத் தலைவர்களுடன் நேருக்கு நேர் பேசுகின்ற ஆளுமை



இந்தியப் பிரதமர்
நரேந்திர மோடியுடன்



பிரித்தானியப் பிரதமர்
டேவிட் கமரூனுடன்




இலங்கையின் ஆதிக்குடிகள்
தமிழர்களே! இந்திய மண்ணில்
நீதியரசர் முழக்கம்



ஈழத்தின் தமிழ்த் தலைவனை
புடைசூழ்ந்த இந்திய ஊடகவியலாளர்கள்

X

## தமிழ் மக்கள் தேசிய கூட்டணி

### ஆளுமை மிக்க

அரசியல் தலைமையை
உருவாக்க

உங்கள் வாக்குகளை
**மீன்** சின்னத்துக்கு
வழங்குங்கள்



6

நீதியரசர்
**சி.வி.விக்னேஸ்வரன்**



2

**க.அருந்தவபாலன்**
(ஓய்வுநிலை அதிபர்)



10


**தவச்செல்வம் சிற்பரன்**
(Architect மொறட்டுவ பல்கலைக்கழகம்)

கல்வியாளர் சமூகம்

(C-068)

# ஆடி மாத இராசி பலன்கள்

## 16.07.2020-16.08.2020



சார்வரி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி வக்கிரம் பெற்றிருக்கின்றார். அவரோடு லாபாதிபதி குருவும் வக்கிரம் பெற்று அதே இடத்தில் இருக்கின்றார். மேலும் கேதுவும் தனுசில் இருந்து உங்கள் இராசியைப் பார்க்கின்றார். எனவே இம்மாதம் எதிலும் கொஞ்சம் விழிப்புணர்ச்சி தேவை. விரக்தி மனப்பான்மை மேலோங்கும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது.

கடக புதனின் சஞ்சாரம்

ஜுலை 27ஆம் திகதி கடக இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் 6ஆம் இடத்திலுள்ள சூரியனோடு இணைந்து புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார். மேலும் 8 இற்கு அதிபதி புதன் 6இல் சஞ்சரிக்கும் பொழுது 'விபரீத ராஜயோகம்' செயற்படும். எனவே திட்டமிடாமல் செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு.

மிதுன சுக்கிரனின் சஞ்சாரம்

ஜுலை 30 ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் பஞ்சம ஸ்தானத்திற்கு வரும்பொழுது நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறும். பாகப்பிரிவினைகள் சுமுகமாகும். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். தந்தை வழி உறவில் ஆதரவு கிடைக்கும். பழைய கடனில் ஒரு பகுதியைச் செலுத்தி மகிழ்வீர்கள்.

சமுதாயப் பணிகளில் ஆர்வம் காட்டும்நேரம் இது. அனுபவம் உள்ளவர்களின் ஆலோனைகள் பலன்தரும்.

மேஷ செவ்வாயின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 12ஆம் திகதி மேஷ இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். சகோதர சகாய ஸ்தானத்திற்கு செல்லும் செவ்வாயால் உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். இடம், பூமியால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். தொழில் சம் பந்தமாக எடுத்த புது முயற்சிக்கு நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். உடல்நலம்




சீராகி உற்சாகப்படுத்தும். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் வந்துசேரும்.

சிம்ம புதனின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 13ஆம் திகதி சிம்ம இராசிக்கு புதன் செல்கின்றார். இதன் விளைவாக வெளிநாட்டிலிருந்து நீங்கள் எதிர்பார்த்த அனுகூலமான தகவல் வந்து சேரும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. சுபகாரியங்கள் திட்டமிட்டபடி நடைபெறும். வருமானம் போதுமானதாக இருக்கும். இம்மாதம் அஷ்டலட்சுமி வருகைப் பதிகம் பாடி, இல்லத்து பூஜை அறையில் திருமகளை வழிபாடு செய்வது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் சனி, கேது ஆகிய இரண்டின் பார்வையும் உங்கள் இராசியில் பதிவதால் கூடுதல் கவனம் தேவை. ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் உண்டு. கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பொருளாதார பற்றாக்குறையால் நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடும். பணிபுரியும் பெண்களுக்கு சகஊழியர்களால் தொல்லைகள் ஏற்படும். இல்லத்தில் சனிக்கிழமை தோறும் விரதமிருந்து அனுமன் கவசம் படிப்பது நல்லது.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

சார்வரி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் வக்கிரம் பெற்று 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். தொழில் ஸ்தானாதிபதி குரு வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. அவரோடு இலாபாதிபதியாகவும், விரயாதிபதியாகவும் இருக்கும் சனியும் வக்கிரம் பெற்று சஞ்சரிக்கின்றார். இந்த வக்கிர இயக்கத்தால் எதிர்பாராத சில சங்கடங்களும், சச்சரவுகளும் வந்து சேரலாம். உடல் ஆரோக்கியத்திலும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும். பொருளாதாரப் பற்றாக்குறை அதிக ரிக்கும்.

கடக புதனின் சஞ்சாரம்

ஜுலை 27ஆம் திகதி கடக இராசிக்குப் புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் பஞ்சம ஸ்தானத்திற்கு வரும்பொழுது பிள்ளைகள் வழியில் ஒரு நல்ல சம்பவம் நடைபெறும். பூர்வீகச் சொத்துக்களை பிரித்துக்கொள்வதில் இருந்த பிரச்சினை அகலும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி கள் தென்படும். பொது நலத்தில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப் புகள் கிடைத்து மகிழ்ச்சியடைவர்.

மிதுன சுக்கிரனின் சஞ்சாரம்

ஜுலை 30ஆம் திகதி மிதுன இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். இதன் விளைவாக ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். விலங்கு வளர்ப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு, இடம் வாங்குவதில் இருந்த வில்லங்கங்கள் அகலும். மக்கள் செல்வங்களால் மகிழ்ச்சிக்குரிய தகவல் வந்து




சேரும். வெகுநாட்களாக முயற்சித்த காரியம் இப்பொழுது நடைபெறலாம். நண்பர்களால் நல்ல காரியம்நடைபெறும்.

மேஷ செவ்வாயின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 12ஆம் திகதி மேஷ இராசிக்குச் செவ்வாய் வருகின்றார். இதன் விளைவாக தன ஸ்தானம் வலுவடைவதால் பொருளாதாரப் பற்றாக் குறை அகலும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். விலகிச்சென்ற உடன் பிறப்புகள் விரும்பி வந்திணைவர். வீடு மாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும் வருவது போல் தோன்றும். வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்வது நல்லது.

சிம்ம புதனின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 13ஆம் திகதி சிம்ம இராசிக்குப் புதன் செல்கின்றார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம், 6இல் வருவது யோகம் தான்.

உத்தியோக வாய்ப்புகள் கைகூடும். உயர் அதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். கூட்டுத் தொழில் செய்வோர் மாற்றம் செய்ய நினைப்பர். உறுதியாகாத திருமணப் பேச்சு முடிவாகலாம்.

வாழ்க்கைத் துணைவழியே ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். இம்மா தம் சண்முக நவக்கிரக பாமாலையை படித்து சுப்ரமணியரை வழிபடுவது நல்லது.



பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் உங்கள் இராசிநாதன் வக்கிர இயக்கத்தில் இருப்பதால் சில காரியங்கள் கடைசி நேரத்தில் கைநழுவிச் செல்லலாம். பணப்பற்றாக்குறை அகலும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வதே நல்லது. குழந்தைகளின் எதிர்கால நலனில் அக்கறை செலுத்துவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். அறுபத்து மூவர் வழிபாடு ஆனந்தமான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். (முற்றும்)

# இடிக்கப்பட்ட கட்டடம் புவனேகபாகு கட்டியதல்ல

## நகர சபைத்தலைவர் விளக்கம்

(குருநாகல்)

13 ஆம் நூற்றாண்டில் குருநாகலை இராசதானியாக கொண்டு ஆட்சி செய்த முதலாம் மன்னர் புவனேகபாகு மன்னனின் காலத்தில் கட்டப்பட்ட கட்டடம் ஒன்றை இடித்த விவகாரத்தில், தொல்லியல் திணைக்களத்தினால் பதில் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதலாம் புவனேகபாகுவின் நீதி பரிபாலனம் இடம்பெற்ற



பலகையினால் அமைந்த பகுதியொன்றே இடிக்கப்பட்டதாக சிங்கள சமூகத்தில் முறைப்பாடு எழுந்துள்ளது.

இது தொடர்பாக குருநாகல் நகரசபை தலைவர் விளக்கமளித்தபோது, இடிக்கப்பட்டது பழைய கட்டடம்அல்ல. அதனுடன் அண்மையில் கட்டப்பட்ட ஹோட்டலின் ஒரு பகுதி என்று கூறினார். தொல்லியல் துறை ஒரு போதும் இந்த இடத்தை தொல்பொருள் இடமாக குறிப்பிடவில்லை, இது குருநாகல் இராச்சியத்தின் ஒரு பகுதியாக இது வரை நிறுவப்படவில்லை என்றும் கூறினார்.

முன்னாள் அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேராவின் அறிவுறுத்தலின் பேரில் குருநாகலில் உள்ள ஒரு தொழிலதிபருக்கு 30 வருட குத்தகைக்கு இந்த இடம் வழங்கப்பட்டது.

இருப்பினும், இந்த இடம் ஒரு ஹோட்டலாக அறியப்பட்டதை விட, மதுவிற்கு மிகவும் பிரபலமானது என்றும், பின்னர் அந்த இடம் நகரசபையால் கையகப்படுத்தப்பட்டது என்றும் கூறினார். தம்மால் இடிக்கப்பட்ட பகுதி புவனேகபாகுவால் கட்டப்படவில்லை, கட்டடத்தை குத்தகைக்கு எடுத்து ஹோட்டலை நடத்திய தொழிலதிபரின் மகனால் கட்டப்பட்டது என்றார்.

பல்வேறு அரசியல் தாக்கங்கள் காரணமாக, ஹோட்டல் அமைந்துள்ள பகுதியிலுள்ள பிரதான சாலை அண்மைக் காலங்களில் அகலப்படுத்தப்படவில்லை. இதற்காக பழைய கட்டடத்துடன் இணைக்கப்பட்ட பகுதி மட்டுமே இடிக்கப்பட்டது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# இறப்பர் உற்பத்தியை அதிகரிக்க முன்னுரிமை



(கொழும்பு)

இறப்பருக்கு சாதாரண விலையினை பெற்றுக்கொடுப்பதோடு உள்நாட்டு இறப்பர் உற்பத்தியை அதிகரிப்பதற்கு முன்னுரிமை அளிக்கவுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொழிலற்றவர்களை இத்தொழிலிற்கு ஈர்ப்பதற்கான ஒரு வழிமுறையாகவும் அமையுமென ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலை முன்னிட்டு பொதுஜன முன்னணி வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்யும் நோக்கில் கேகாலை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 47 பேர் கைது

(திருமலை)

திருகோணமலைக்கு வெளியே உள்ள ஃபவுல்துடுவ கடலில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 47 பேர் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


கிழக்கு கடற்படை கட்டளைக்கு இணைக்கப்பட்ட கடற்படை வீரர்கள் குழு, கடந்த 17 ஆம் திகதி திருகோணமலைக்கு வெளியே உள்ள ஃபவுல்துடுவ கடலில் மேற்கொண்ட சிறப்பு சோதனை நடவடிக்கையின் போது தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிக்கச் சென்ற 47 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 8 டிங்கி படகுகளும் கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது. படகுகளில் இருந்து 557 கிலோகிராம் மீன் மற்றும் பல மீன்பிடி கியர்களையும் கடற்படை பறிமுதல் செய்துள்ளது. (ஐ-4)



# ஆன்மீகம்

## தடைக்கற்கள்... எடைக்கற்கள்



என் நண்பர் ஒருவர் உற்சாகமாக உரத்த குரலில் உல்லாச நிலையில் பாடிக் கொண்டிருந்தார். 'ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது, இந்த உலகம் பாடும் பாடல் ஓசை காதில் விழுகிறது, நண்பரிடம் என் மகிழ்வையும் பகிர்ந்து கொண்டு என்ன விடயம்?' என்று கேட்டேன்.

'இன்னும் பத்து நாளில் நம் ஊரின் முக்கிய பகுதியில் நான் ஒரு துணிக்கடை தொடங்க உள்ளேன். இன்று நம் ஊர் கோயிலில் சென்று பெரிய வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்து தெய்வத்திடம் மனதார இறைவா வியாபாரம் நன்கு நடக்க வேண்டும். தடைகள், சோதனைகள் எதுவுமின்றி அமோகமாக விற்பனை நடக்க வேண்டும். கடையின் முதல் ஆண்டு விழா அன்று கோயிலில் அன்னதானம் செய்கின்றேன்' என்று வேண்டிக் கொண்டேன். என்றார்.

வழிபடும் தெய்வத்திடம் நண்பர் ஒரு வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டு வந்ததற்காகக் கூட நான் வருத்தப்படவில்லை. அவருடைய குழந்தைத்தனமான மனோ நிலையைக் குறித்து நெஞ்சிற்குள் நகைத்துக் கொண்டேன். தடைகள் சோதனைகள் எதுவுமின்றி அமோகமாக வியாபாரம் நடக்க வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டது போல தான் அநேகம் பேர் தற்காலத்தில் கடவுளிடம் வேண்டுகின்றார்கள்.

'வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்.'

சோதனைகளும், வேதனைகளும், இடர்களும், தடைகளும் பிரச்சினைகளும், பூகம்பங்களும் இல்லாமல் இதுவரை எந்த சாதனையாளர் தன் இலக்கை எட்டியிருக்கிறார் என்று எண்ணிப் பார்த்தால் மருந்துக்கு கூட ஒருவர் பெயர் நம் மனதில் வராது.

பாடசாலைக்கு பலநாள் விடுமுறை வரவேண்டும், எனக்குத் தெரிந்த பதில்களுக்கான கேள்விகளே வினாத்தாளில் இடம் பெற வேண்டும், என் விடைத்தாளை திருத்தும் போது அந்த ஆசிரியர் மகிழ்ச்சியான மனோ நிலையில் இருக்க வேண்டும்' என ஒரு இளம் மாணவன் நினைப்பதைப் போலவா நாம் இறைவனிடம் வேண்டிக் கொள்வது?

'பிரச்சினைகளில் இடிந்து போய் உட்கார்ந்துவிடாத உள்ள உறுதியைத் தா, விழுந்தாலும் எழுந்து நடக்கிற வல்லமையைத் தா' என்று தானே நாம் தெய்வத்திடம் தெரிவிக்க வேண்டும்.

வாழைத் தண்டைப்போல வழுவழுப்பான வாழ்க்கைப்பாதை யாருக்கும் அமைந்துவிடாது; கரும்பைப்போல கணுக்கள் பல கட்டாயம் இருக்கும். கணுக்களைத் தகர்த்தெறிந்து, பிழிந்து குடிப்பதில் தானே பேரின்பம் இருக்கிறது.

'கடித்துக் கரும்பினைக் கண் தகர நூறி
இடித்து நீர் கொண்டால் இன்சுவை'

என நாலடியார் வெண்பா ஒன்று நயம்பட உரைக்கிறது. ஒரு பெரியவர் அற்புதமாகச் சொன்னார்: ஓ மனிதனே இறைவன் சந்நிதியில் நின்று என் பிரச்சினைகள் பெரிது என்று முறையிடாதே. பிரச்சினைகளிடம் சென்று என் இறைவன் பெரியவன் என்று சொல்.

'ஆம் எத்தனை ஞானிகளின் வரலாற்றைப் படிக்கிறோம். அவர்களுக்கெல்லாம் நேராத சோதனையா? இடர்களா? கஷ்டங்களையே கஷ்டப்படுத்தும் மனோபலத்தை அவர்களுக்குத் தெய்வம் வழங்கி, அவர்களைப் புகழ் உச்சியில் பொலிய வைத்துள்ளதே' தெய்வப் புலவர் திருவள்ளுவரும் இதைத் தான் தெரிவிக்கின்றார். இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு இடும்பை படாஅ தவர்.'

தொடரும்...

# செய்தித்துளிகள்

## தனிமைப்படுத்தப்பட்ட இராணுவ அதிகாரியின் வீட்டில் கொள்ளை

(கொழும்பு)

கொரோனா தொற்றுக்குள்ளானவரென உறுதிப்படுத்தப்பட்ட இராணுவ அதிகாரி ஒருவரின் வீட்டை உடைத்து, கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் பதிவாகியுள்ளது.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் ஆலோசகராகக் கடமையாற்றி வந்த நிலையில், கொரோனா தொற்றுக்குள்ளான குறித்த இராணுவ அதிகாரியின் தலவத்துர பிரதேசத்திலுள்ள வீடு, உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக தவுலகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜூன் மாதம் 19 ஆம் திகதி விடுமுறையில் வீட்டுக்கு வந்துள்ள இவர் கடந்த 11 ஆம் திகதி தொற்றுக்குள்ளானமை உறுதி செய்யப்பட்டதையடுத்து, இவரது மனைவி மற்றும் மகள்மார் இருவர், தாய் உள்ளிட்டவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே அவர்களின் வீடு உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும இது தொடர்பில் 3 விசேட பொலிஸ் குழுக்கள் மற்றும் புலனாய்வுப்பிரிவு அதிகாரிகள் குழுவும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தவுலகல பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ-4)

## கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது

(கொழும்பு)

கிரிபத்கொடை-நாஹேன பகுதியில் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களனி வலய குற்றவியல் விசாரணைப் பிரிவினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு சந்தேக நபர்கள் முதலில் களனி பகுதியில் இருந்து கைது செய்யப்பட்டதை தொடர்ந்து அவர்களிடம் மேற் கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, பிரதான சந்தேக நபர் பன்னிப்பிடிய பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 400 | 180 | 250 |
| தக்காளி | 150 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 140 | 100 |
| கோவா | 150 | 120 | 120 |
| கரட் | 140 | 160 | 200 |
| பூசணி | 50 | 40 | 60 |
| புடோல் | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 140 | 140 | 120 |
| சின்ன வெங்காயம் | 180 | 140 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 300 | 250 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 120 |
| பயற்றங்காய் | 300 | 300 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 100 | 120 | 120 |
| கறிமிளகாய் | 200 | 180 | 240 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 35 | 40 |
| தேசிக்காய் | 200 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 60-80 |
| இராசவள்ளி | -- | 350 | -- |
| வெங்காயப்பூ | 250 | 200 | 240 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 30 |
| ஈரப்பலா | 60 | 90 | 50 |




## சொந்த இடம்

அயோத்தியா நகரத்தில் சித்திராங்கன் என்ற ஒரு நாய் வாழ்ந்து வந்தது. நாள்தோறும் பசியில் வாடி, அலைந்து கொண்டிருந்தது.

ஒருநாள் அந்த நாய், 'நாம் ஏன் உணவு கிடைக்காத இந்த நகரத்தில் அலைந்து கொண்டிருக்கவேண்டும்? என்று நினைத்து, நாம் வேறு ஒரு நகரத்திற்குச் சென்று விடலாமே என்று நினைத்தது.

தன்னுடைய சக நண்பர்களிடம் கூறிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டு அருகில் உள்ள வேறொரு நகரத்திற்குச் சென்றது.

அங்கு ஒரு வீட்டில் சென்று தஞ்சம் புகுந்தது. அந்த வீட்டிலிருந்த எஜமானி அம்மா இந்த நாயைத் தன் வீட்டிற்குள்ளேயே வைத்துக் கொண்டு, அதனைத் தன் பிள்ளை போல வளர்த்து வந்தாள். அந்த நாய்க்கு நல்ல உணவும் மதிப்பும் இருந்து வந்தது.

ஒருநாள் அந்த நாய் தன் எஜமானி அம்மாவுக்குத் தெரியாமல் வீட்டைவிட்டு வெளியே வந்து, தெருவில் நின்றது.


அந்தத் தெருவில் வாழும் பிற நாய்கள் அந்த நாயைக் கண்டதும் விரட்டிக் கடிக்கத் தொடங்கின. இரத்தக் காயத்தோடு அந்த நாய் மீண்டும் அயோத்தியா நகருக்கே திரும்பி வந்தது.

அந்த நாயின் நண்பர்கள், 'என்ன நண்பா! புதிய நகரம் எப்படி இருந்தது?' என்று விசாரித்தன.

அதற்கு அந்த நாய், 'அந்த நகரம் செழிப்பாக இருக்கிறது. அந்த நகரத்துப் பெண்கள் இரக்க குணமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், அங்கிருக்கும் நம் இனத்தவர்கள்தான் சரியில்லை. அதனால்தான் நான் திரும்ப இங்கேயே வந்து விட்டேன்' என்றது.

'ஆதலால் எப்போதும் சொந்த இடத்தில் இருப்பதுதான் சுகம்' என்றது அந்த நாய்.



# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## வீரப்பரம்பரை




இப்படியொரு குழப்பம் வந்துவிடக்கூடாது என்றுதான் இருவருக்குமிடையே ஓர் ஒப்பந்தம் போடப்பட்டதாகத் தெரிகிறது. இதை உறுதிப்படுத்துகிறது திருவாலங் காட்டுப் பட்டயம்.

அருண்மொழியின் உடலில் உள்ள சில ஆளடையாளங்களைப் பார்த்தபோது மூவுலகையும் காக்கும் ஆற்றல் படைத்த திருமாலே, பூவுலகுக்கு வந்திருப்பதாக நினைத்து, மதுராந்தகன் அவனை இளவரசனாக்கி மண்ணுலகை ஆளும் பொறுப்பைத் தானே மேற்கொண்டான்.

மதுராந்தகன் யார்? கண்டராதித்த சோழனின் மகன். அதாவது ராஜராஜனின் சிற்றப்பன் மகன்.

மதுராந்தக உத்தம சோழனை அரியணையில் அமரவைத்து வேடிமக்கை பார்த்த ராஜராஜனுக்கு மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு ஏற்பட்டது.

உத்தமசோழன், ஆதித்தகரிகாலனைக் கொன்றது நாளடைவில் மக்களுக்குத் தெரியவந்தது.

இதனால் மக்கள் உத்தமசோழன் மீது கடும் கோபத்தில் இருந்தார்கள்.

ராஜராஜசோழன் மன்னராக வேண்டும் என்று மக்கள் விரும்பியதை திருவாலங்காடு பட்டயங்களும் உடையார்குடி கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன.

திருவாலங்காட்டுச் செப்பேடு இவ்வாறு கூறுகிறது. விண்ணுலகுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசையால் ஆதித்தன் மறைந்தான்.

கலியின் வல்லமையால் ஏற்பட்ட காரிருளைப் போக்க, அருண்மொழிவர்மனை அரசனாகுமாறு அவனுடைய குடிமக்கள் வேண்டினர்.

ஆனால் சத்திரிய தர்மத்தை நன்கு அறிந்த அருண்மொழி அரச பதவியை மனதார விரும்பவில்லை என்று கூறிவிட்டான்.

தன்னுடைய சிற்றப்பன் அவ்வரச பதவியை விரும்புவதை உணர்ந்தமையால் தன் சிற்றப்பன் ஆசை தீருமட்டும் அரசனாக இருக்கட்டும் என்று அருண்மொழி அரச பதவியை மறுத்து விட்டான்.

ஆனால் இப்படிப்பட்ட சாதகமான நிலையிலும் சோழர் பரம்பரைக்கு எந்தவொரு மாசும் ஏற்படக்கூடாது என்பதற்காக ஒதுங்கி நின்ற ராஜராஜனின் மீது அனைவருக்கும் கரிசனம் ஏற்பட்டது.

கொலைகாரன் உத்தம சோழனின் ஆட்சி எப்போது முடியும் என்று காத்துக் கிடந்தார்கள்.

(தொடரும்)

உபாசனை செய்வதனால் மனம் தெளிவு அடைகிறது. சிலருக்குப் போன பிறவிகளில் செய்த நல்ல வினைகளால் இப்போது அந்தத் தெளிவு ஏற்படுகிறது.
– ரமண மகரிஷி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முன்னேற்பாட்டுடன் பிதிர்க்கடன் செய்மினே!

அகால மரணங்கள் தொடர்பில் ஆய்வு செய்த தமிழகத்தின் பிரபல சோதிடர் ஒருவர் பிதிர்க்கடன் செய்யப்படாதவிடத்து, அவலச் சாவுகள் ஏற்பட வாய்ப்புண்டு எனக் கூறுகிறார்.

இஃது ஒரு சமூகவியல் பற்றியது என்பதால் விஞ்ஞான ரீதியில் நிரூபிப்பதென்பது கடினமே.

எனினும் பிதிர்க்கடன் பற்றிய சிந்தனை இன்று நேற்று அல்ல அஃது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பின்பற்றப் படுகிறது.

இதற்கு தென்புலத்தார் என வள்ளுவர் கூறுகின்ற குறள் ஆதாரமாகும்.

தவிர, ஞானிகளும் யோகிகளும் பிதிர்க்கடன் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

எனவே பிதிர்க்கடன் செய்ய வேண்டுமா என்ற கேள்விகளைக் கடந்து; எந்தை, அவர் தந்தை, எம் முந்தையரை நினைந்து தர்ப்பணம் செய்வது நன்றியின் பாற்பட்டது.

ஆகவே பிதிர்க்கடன் செய்வதிலிருந்து எவரும் பின்னடித்து விடாதீர்கள்.

இந்த வகையில் இன்று ஆடி அமாவாசை. தேகவியோகம் அடைந்த தம் தந்தையை நினைந்து விரதம் இருந்து, புனித தீர்த்தங்களில் நீராடித் தர்ப்பணம் செய்து தான தர்மங்கள் கொடுத்து; இப்பூவுலகினின்றும் பிரிந்தேகிய தந்தையின் அவர் வழி ஆண் சந்ததியின் ஆன்ம ஈடேற்றத்துக்காக வேண்டுதல் செய்கின்ற விரதமே ஆடி அமாவாசையாகும்.

ஒவ்வொரு அமாவாசை நாளிலும் விரதம் இருப்பதே முறையாயினும் இன்றைய இயந்திர உலகில் அஃது சாத்தியப்படாத நிலை உள்ளதால், வருடத்தில் ஒருமுறை வருகின்ற ஆடி அமாவாசை தினத்திலேனும் பிதிர்க்கடன் செய்வது அவசியமாகும்.

இங்கு 2020ஆம் ஆண்டின் ஆடி அமாவாசை என்பது கொரோனாத் தொற்று என்ற அபாயக் கட்டத்துக்குள் அகப்பட்டுள்ளது.

எனவே ஆடி அமாவாசை விரதத்தை அனுஷ்டிக்கின்ற அதேநேரம், கொரோனாத் தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாப்பதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் செய்தாக வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டே அதுபற்றி இவ்விடத்தில் பிரஸ்தாபிக்கின்றோம்.

இதற்கு மேலாக, ஆடி அமாவாசை விரதத்தை நிறைவேற்றுகின்ற இடங்களில் கொரோனாத் தொற்றுப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்த பிரதேசம் சார்ந்த சுகாதார வைத்திய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதும் அவசியமாகும்.

பொதுவில் மக்கள் அதிகளவில் கூடிய இடங்களிலிருந்தே கொரோனாத் தொற்று பரவியது என்ற விடயம் இங்கு நினைவு படுத்தற்குரியது.

# உயர்தரப் பரீட்சை மாணவர்கள் நெருக்கடியில்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கான திகதி குறித்து அரசாங்கம் இதுவரை சரியான தீர்மானத்தை எடுக்காதுள்ளதால், மாணவர்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளனரென, இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க குற்றஞ்சாட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர், பரீட்சை விடயத்தில் அரசாங்கம் தொடர்ச்சியாக காலதாமதத்தை ஏற்படுத்தி வருகிறது. இச் செயற்பாடானது, மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகவே பார்க்கப்படுகிறது என்று கூறிய அவர், உயர்தர மாணவர்கள் மிகவும் திட்டமிட்டு, ஓர் இலக்கை நோக்கியே பரீட்சையை எதிர் நோக்குவார்கள்.

இவ்வாறு தொடர்ச்சியாக பரீட்சையை பிற்போடுவதால், அவர்கள் பரீட்சைக்கு தங்களை தயார்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (ஜ-8)

# வடக்கு- கிழக்கு மக்களின் பிரச்சினை ஐ.தே.கவுக்கு வெறும் தேர்தல் பிரசாரமே

## சந்திரசேன சாடல்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினை, ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெறும் தேர்தல் பிரசாரம் மாத்திரமே என வனஜீவராசிகள் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் துறை அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டிலுள்ள அனைத்து இன மக்களுக்கும் எந்தவொரு வேறுபாடுமின்றி அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படும்.

மேலும் சிறந்த அரசாங்கமொன்றை அமைப்பதற்காக சிறுபான்மையின மக்களுக்கு போலியான வாக்குறுதிகளை ஒருபோதும் வழங்கமாட்டோம்.

ஐக்கிய தேசியக் கட்சி, வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை தேர்தல் பிரசாரங்களுக்காக பயன்படுத்துகின்றது. இவ்வாறான செயற்பாடுகளை நாம் ஒருபோதும் செய்யமாட்டோம்.

இதேவேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளார்" என அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-8)

# வாக்குச்சீட்டை படமெடுத்த ஆசிரியர் ஒருவர் கைது

(திருகோணமலை)

தபால் மூல வாக்களிப்பின்போது வாக்குச்சீட்டை தொலைபேசியில் புகைப்படம் எடுத்த ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலைமூதூர் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை ஆசிரியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு இன்றைய தினம் குறித்த ஆசிரியர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ஞா)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும்பராமரிப்புவேலைகளுக்காக நாளை 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல்5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** அரியாலை கிழக்கு, நாவலடி பிரதேசம், பூம்புகார் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கோவில் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, நெளுக்குளத்திலிருந்து உளுக்குளம் வரை, கூமாங்குளத்திலிருந்து அவுசதாப்பிட்டிய வரை, பத்தினியார்மகிழங்குளம் கிராமம், கிறிஸ்தவகுளம், புளியங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நேரத்தின் மகிமையை அறிந்து கொள். காலமே உன் உயிர். அதைவீணாக்குவது உன்னை நீயே கொலை செய்வது போலாகும்.-ஜேம்ஸ் ஆலன்

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

# எண்ணம்



எண்ணம் வேறு, நீ வேறு அல்ல, சிந்தித்துப் பார், அது காலம், இடம், பருமன், இயக்கம் என்ற நான்கு விதத் தன்மைகளோடு இயங்கிக் கொண்டும், அவற்றைக் கடந்து மௌன நிலையடைந்தும் மாறி மாறி நிற்கும் மாயாஜாலப் பொருள். உள் எண்ணத்தின் நிலையை அறிந்து கொண்டால் நீ உன்னை அறிந்து கொண்டாய் என்பது தான் பொருள். அது வரையில் சந்தர்ப்பங் கிடைக்கும்போதெல்லாம் எண்ணத்தைப் பற்றி ஆராய்ந்து கொண்டே இரு. எண்ணத்தை நிறுத்த முயலாதே, அது அதிகமாக அலையும், அதை அறிய முயன்றால், அப்போதுதான், அது தானே சிறுகக் சிறுக அமைதி பெறும்.

எண்ண இயக்கம் தான் வாழ்வு. அது உடலில் இரத்த ஓட்டம் இருக்கும் மட்டும், நித்திரை காலம் தவிர மீதி நேரத்தில் இயங்கிக் கொண்டே தான் இருக்கும். எண்ணத்தைப் பண்படுத்தவும் பயன்படுத்தவும் வழிகாண வேண்டும், பழக வேண்டும். அந்தப் பெருநிதியை அழிக்க வேண்டுமென்று நீ வீணான முயற்சி கொள்ளாதே! அதுதான் மரணம் என்ற இடத்தில் தானாகவே நின்று விடப் போகின்றதே! எண்ணம் நின்று விட்டால் நீ என்பது தனித்து ஏது?

பல வருடங்களில் எண்ணிறந்தோர்களால் செய்து முடிக்கக் கூடிய காரியங்களை நீ ஒரு நிமிஷத்தில் எண்ணத்தால் திட்டமிடலாம். இத்தகைய சக்தியுடைய நீ எப்போதுமே எதிர்காலத்தைப் பற்றி திட்டமிட்டுக் கொண்டிருக்காதே. இதனால் அவ்வப்போது செய்ய வேண்டிய கடமைகளை மறந்து விடுவாய். செயலோடு சிந்தனையை இணைத்து நிற்பதே மிகவும் உயர்வாகும். அது நழுவாமல் இருப்பதற்கு விழிப்போடு பல நாட்கள் பழக வேண்டும். உனது உடல் இன்பங்களையும், குடும்பத்தையும் மட்டும் ஞாபகத்தில் கொண்டு செயலாற்றினால், உனக்கு வாழ்வில் சலிப்பும், துன்பங்களும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

இயற்கை அமைப்பை, நிகழ்ச்சிகளை, எண்ணத்தின் ஆற்றலை, சமுதாயத்தை, உலகத்தை, ஆகாயத்தில் மிதந்து உலவிக் கொண்டிருக்கும் பலகோடி அண்டங்களை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள். இவைகளோடு உனது அறிவை, இன்ப துன்ப அனுபோகங்களை அடிக்கடி ஒப்பிட்டுப் பார். இதனால், உடலுக்கும், அறிவுக்கும் ஒருங்கே அமைதி தரும் இடையறாத இன்ப ஊற்றுப் பெருக ஆரம்பித்து விடும்.

# ராஜபக்ஷக்கள் தலைமையிலான அரசு மீது மக்கள் வைத்த நம்பிக்கை சிதைந்து விட்டது

## சிங்கள பௌத்த அமைப்பு கவலை

(கொழும்பு)

**ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் இருக்கும் ராஜபக்ஷ சகோதரர்கள் தலைமையிலான அரசாங்கம் பௌத்த பாரம்பரியங்களை பாதுகாக்கும் என மக்கள் வைத்த நம்பிக்கை சிதைந்து விட்டதாக, சிங்கள பௌத்த அமைப்பு ஒன்று கவலை வெளியிட்டுள்ளது.**

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பௌத்த பாரம்பரியத்தை பாதுகாப்பதாக உறுதியளித்து, பிரசாரம் செய்த ஜனாதிபதி தற்போது அதற்கு நேரெதிராக செயற்படுவதை மக்கள் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை என கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், ஹெல பொது சவிய அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

வரலாற்று சிறப்புமிக்க நகரமான குருநாகலில், இரண்டாம் புவனேகபாகு ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட 700 ஆண்டு கள் பழைமையான கட்டிடம் இடிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போதைய பிரதமர் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டத்தில் இது போன்ற சம்பவம் இடம்பெற்றுள்ளமை தொடர்பில் பொது மக்கள் சந்தேகம் கொள்வது நியாயமானது எனவும் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள இந்த நேரத்தில் தற்போதைய புத்தசாசன மற்றும் கலாசார அமைச்சரின் தேர்தல் மாவட்டத்தில் இதுபோன்ற விடயங்கள் இடம்பெறக்கூடாது.

மேலும், தனது தொகுதியில் இத்தகைய மதிப்புமிக்க வரலாற்றுத் தளங்களை பாதுகாக்க முடியாத ஒரு வேட்பாளர் எவ்வாறு வடக்கிலுள்ள முஹுது மகா விகாரை, தெவனகல மற்றும் குரகல இடிபாடுகளை பாதுகாக்க முடியும் என்பது தொடர்பில் பொது மக்களுக்கு நியாயமான சந்தேகம் காணப்படுகின்றது" எனவும் அந்தக் கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் பாரம்பரியமிக்க இடங்களை நிர்வகிக்க ஜனாதிபதி அண்மையில் ஒரு செயலணியை அமைத்துள்ளதோடு, அந்தக் குழுவில் ஒரே மதத்தைச் சேர்ந்த தலைவர்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டமைக்கு சிவில் சமூகத்தினர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

தொல்பொருள் இடங்கள் பாதுகாக்கப்பட வேண்டிய நேரத்தில் இத்தகைய மதிப்புமிக்க தளங்கள் யாருடைய செல்வாக்கின் கீழ் தகர்க்கப்படுகின்றன என்றும் குறித்த அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் உள்ள அரசியல் சக்திகள் குறித்த விசாரணையை விரைவுபடுத்தவும், எதிர்கால தலைமுறையினருக்காக வரலாற்று முக்கியத்துவத்தை பாதுகாக்கும் வகையில், குறித்த கட்டடத்தை அதே இடத்தில் மீண்டும் நிர்மாணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும், அவ்வாறு ஜனாதிபதி செயற்படாத பட்சத்தில் தேர்தலில் ஜனாதிபதியை அதிகாரத்திற்கு கொண்டுவர செயற்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் அகௌரவமாகவும் அமையுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ-4)

# கொரோனாவைக் கட்டுப்படுத்த பொதுச்சுகாதார பரிசோதகர்களின் பங்களிப்பு இன்றியமையாதது

## கரு சுட்டிக்காட்டு



(கொழும்பு)

சமூகமட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் அர்ப்பணிப்பான சேவை மிக முக்கியமானதாகும்.

எனவே வைரஸ் பரவல் கட்டுப்படுத்தல் செயற்பாட்டில் முழுமையான வெற்றியைப் பெறுவதற்கு அவர்களின் நேரமறையான பங்களிப்பைப் பெற்றுக்கொள்வது இன்றியமையாதது என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

கொரோனாவை கட்டுப்படுத்துவது தொடர்பான அடிப்படை வசதிகள் இல்லாமை, தொற்று நோய்த்தடுப்பு சட்டத்தின் கீழ் அதிகாரத்தை வழங்காமை, தான்தோன்றித்தனமாக அரசியல் பிரசாரக்கூட்டங்களை நடத்துதல் போன்ற காரணங்களை முன்வைத்து கடந்த வெள்ளிக்கிழமை கொரோனா வைரஸ் ஒழிப்பு மற்றும் கட்டுப்பாடு தொடர்பான அனைத்துப் பணிகளிலிருந்தும் அனைத்துப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களும் விலகினர்.

இந்நிலையில் இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள கரு ஜயசூரிய மேலும் கூறியுள்ளதாவது.

பொதுத்தேர்தலின் போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் உள்ளடங்கிய வர்த்தமானி அறிவித்தல் தொடர்ச்சியான வலியுறுத்தல்களின் பின்னர் வெளியிடப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக உரிய அதிகாரிகள் வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ளவற்றை முறையாக அமுல்படுத்துவது முக்கியமானதாகும்.

அதேபோன்று சமூக மட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் அர்ப்பணிப்பான சேவை மிக முக்கியமானதாகும்.

எனவே வைரஸ் பரவல் கட்டுப்படுத்தல் செயற்பாட்டில் முழுமையான் வெற்றியைப் பெறுவதற்கு அவர்களின் நேரமறையான பங்களிப்பைப் பெற்றுக்கொள்வது இன்றியமையாதது என்று கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-4)

# நாட்டில் இரண்டாம் அலை ஏற்பட்டால் பொருளாதாரம் தரைமட்டமாகிவிடும்

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

கொரோ்னா வைரஸ் பரவலின் இரண்டாம் அலை ஏற்பட்டால் நாட்டின் பொருளாதாரம் தரைமட்டமாகிவிடும் என்று தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஹர்ஷ டி சில்வா , இரண்டாம் அலை ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நாட்டு மக்களின் பொறுப்பு என்றும் அதற்கு அரசாங்கத்தையோ எதிர்க்கட்சியையோ குறைசொல்வதில் அர்த்தம் இல்லை என்றும் கூறினார்.

இதேவேளை சாதாரண மக்களின் பிரச்சினைகளுக்கு தங்களாலே தீர்வினை பெற்றுக் கொடுக்க முடியும் என்று எண்ணியிருந்த ராஜபக்ஷக்களுக்கு தற்போது அதனை நிரூபிக்க முடியாமல் போயுள்ளது என்றும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ அதற்கான தீர்வினை. கண்டறிந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் , அரசாங்கம் இறக்குமதி செயற்பாடுகளை தடுத்து வைத்துவிட்டு, நாட்டில் தற்போது ஏற்றுமதி அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெருமை கொள்கின்றனர். இறக்குமதியை தடுத்து வைத்துவிட்டு இவ்வாறு பெருமைக் கொள்வதில் எவ்வித பயனும் கிடைக்கப் போவதில்லை. இலங்கை பொருளாதார நடவடிக்கையை மேம்படுத்த வேண்டுமென்றால் நாம் மதில்களை அமைப்பதில் பயனில்லை. எமது தேசிய உற்பத்திகளை தடையின்றி விநியோகிப்பதற்காக பாலங்களையே அமைக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் பரவலினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் நிதியை பெற்றுக் கொடுப்பதாக சஜித் பிரேமதாஸ கூறியிருப்பதற்கு , ஆளும் தரப்பு உறுப்பினர்கள் அவரை கேலி செய்து வருகின்றனர். எவ்வாறு இவரால் இவ்வளவு பணத்தை பெற்றுக் கொடுக்க முடியும் என்று. இது வொன்றும் பொறுப்பற்று கூறிய கருத்து கிடையாது.

தற்போது நாட்டின் பொருளாதாரம் மீண்டெழுந்து வருகின்றது. இந்நிலையில் இரண்டாவது அலை ஏற்பட்டால் பொருளாதாரம் தரைமட்டமாகிவிடும். இதனால் இந்த இரண்டாம் அலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மக்களின் பொறுப்பாகும் என அவர் தெரிவித்தார். (ஐ-2)

# சுவரொட்டிகள் அகற்றும் பணிகளுக்கு ஐந்து கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

தேர்தல் தொடர்பான சுவரொட்டிகள், பதாகைகள் உள்ளிட்டவற்றை அகற்றும் நடவடிக்கைகளுக்காக சுமார் 5 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த நடவடிக்கைகளுக்காக ஆயிரத்து 539 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதற்கமைய குறித்த ஊழியர்கள் ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களுக்கும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இவ் ஊழியர்கள் ஒருமாத காலத்திற்கு பொலிஸ் நிலையங்களுடன் இணைந்து பணியாற்றவுள்ளனர். (ஐ-8)

# குருநாகலில் ஆர்ப்பாட்டம்

(குருநாகல்)

குருநாகல் இராசதானிக்கு சொந்தமான தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த அரச மண்டபத்தை இடித்து சேதப்படுத்தியமைக்கு கண்டனம் தெரிவித்தும் , இதனுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கண்டறிந்து உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் அரசாங்கத்திற்கு வலியுறுத்தும் வகையில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

குருநாகல் நகரத்தில் அமைந்துள்ள இரண்டாம் புவனேகபாகு மன்னனுக்குச் சொந்தமானது எனக் கூறப்படும் அரச மண்டபமே இவ்வாறு இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை குருநாகல்நகரில்ஆர்ப்பாட்டம்ஒன்றை மேற்கொண்டனர். (ஐ-4)

## இளைஞரின் சட...

மாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-114)

## இன்றும் நாளை...

தவறியவர்களுக்கு இன்றும் நாளையும் வாக்களிக்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாக சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எனினும் இன்றும் நாளையும் அத்தாட்சி அலுவலகம் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட தேர்தல் அலுவலகத்திலேயே வாக்களிக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதோடு சுய தனிமைப்படுத்தல் அல்லது தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த அரச அதிகாரிகளுக்கு ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி வாக்களிக்க விசேட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று காரணமாக சுய தனிமைப்படுத்தல் அல்லது தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டோரில் அரச ஊழியர்களும் உள்ளடங்குவதால் தபால் மூல வாக்களிப்பில் சற்று சிக்கல் உள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்திருந்தார். (ஞா)

## ஒரு வாரம்...

ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பித்துள்ள இந்தப் போராட்டம் வரும் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணி வரை நீடிக்கும் என்று அறிவித்துள்ளனர்.

வடமராட்சி கடற்றொழில் சமாசத்துக்கு உட்பட்ட மீனவர்கள் எவரும் கடற்றொழிலுக்கு செல்லமாட்டார்கள்.

வடமராட்சி கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் கடலட்டை தொழில் மற்றும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவற்றைத் தடுக்கக்கோரி கடற்றொழில் அமைச்சர் உள்ளிட்டோரிடம் வலியுறுத்தியும் நடவடிக்கை எடுக்கப்படாமையைக் கண்டித்தும் வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத்துக்கு உட்பட்ட மீனவர்கள் இந்த தொழில் புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, இந்தப் போராட்டத்துக்கு வடமாகாண கடற்றொழிலாளர்கள் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என்று வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஞா)

## யுவதியின்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 19 வயதுடைய ஜெயதீபன் சிவப்பிரியா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)

## சுகாதார வழி...

பெற்றுக் கொடுக்க முடியும் என சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.த சில்வா குறிப்பிடுகையில், "தேர்தல் தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய வர்த்தமானி அறிவிப்பு வெளிவந்திருக்கின்றது.

இந்த வர்த்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கும் சட்ட திட்டங்களை மீறும் யாராக இருந்தாலும் அந்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்" என்றார். (ஞா)

## பேனாவால் எழுதி...

வெல்லவாய - தன்தும சந்தியில் நேற்று இடம்பெற்ற பரப் புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் பிரச்சினை தொடர்பில் விழிப்புணர்வுடனேயே நாங்கள் செயற்படுகின்றோம்.

நாங்கள் தேசிய தொழிற்சாலைக்கு முதன்மைத்துவம் வழங்குவோம். வெளிநாடுகளில் இருந்து அனைத்து பொருட்களும் கொண்டுவரும் வரை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

அம்பாந் தோட்டையில் உப்பு வைத்துக் கொண்டு இந்தியாவில் இருந்து உப்பு கொண்டு வரப்படுகின்றது.

இவை மாற்றமடைய வேண்டும். அனைத்து பொருட்களும் வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரும் வரை பார்த்துக் கொண்டிருந்த யுகத்தை நிறைவுக்கு கொண்டு வர வேண்டும்.

இதற்கு அவசியமான வேலைத்திட்டத்தை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். நாங்கள் எங்கள் பொருளாதாரத்தை அதிகரித்து, தனிநபரின் வருமானத்தை அதிகரித்தோம். மக்கள் கையில் பணம் புழங்க ஆரம்பித்தது. புதிய நடுத்தர வர்க்கம் ஒன்று உருவாகியது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வேலைத்திட்டங்கள் சிறப்பாக - தெளிவாக - வலுவாக உள்ளதென இன்று ஐக்கிய தேசிய கட்சியினரும் கூறுகின்றார்கள்.

அந்த அனைவரையும் இணைத்துக் கொண்டு மூன்றில் இரண்டு அதிகாரத்தை இந்த தேர்தலில் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

அரசியலமைப்பை மாற்ற, நாட்டிற்கு பொருத்தமான, ஒற்றுமையை பாதுகாப்பதற்காக புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்கு நாங்கள் ஆயத்தம்.

பிரபாகரன் துப்பாக்கியில் பெற முயற்சித்த நாட்டை பேனையில் வழங்க நாங்கள் தயாரில்லை என்றார். (ஞா)

## தேர்தல் சம்பந்த...

அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேர்தல் அரசியல் கடந்து எமது மக்களின் சுபீட்சமான எதிர்காலத்தை இலக்காகக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் பேரவையானது மக்களிடம் அன்புரிமையுடன் பின்வரும் 5 கோரிக்கைகளை முன்வைத்து நிற்கின்றது.

1. தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் அணிதிரண்டு தவறாமல் வாக்களிப்போம் என உறுதி பூணுவோம். எமது பிரதேசத்தில் இயங்கும் பொது அமைப்புக்கள் தொடர்ந்து தமிழ் மக்கள் பேரவைக்கு பெரும் பக்கபலமாக இருந்து வருகின்றன. இந்த அமைப்புகள் அனைத்தையும் பொது மக்களை தவறாது வாக்களிக்க வேண்டும் என ஊக்குவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். நாம் வாக்களிக்கத் தவறின் விலைபோன வாக்குகளே எமது பிரதிநிதிகளைத் தீர்மானிக்கும் துர்ப்பாக்கியம் அரங்கேறிவிடும்.
2. தேர்தலிலே சரியான, நேர்மையான, விலைபோகாத பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதில் எமது முழுக் கவனத்தையும் குவிப்போம். இதற்காக எமது மூன்று விருப்பு வாக்குகளையும் தவறாது பதிவிடுவோம். இவ்வாறு பதிவிடத் தவறின் அந்த விருப்பு வாக்குகள் தவறான முறையில் பயன்படுத்தப்படும் சாத்தியக் கூறுகள் இருப்பதை மனதில் நிறுத்துவோம்.
3. எமது அபிலாசைகள் என்ன என்பதை அடையாளப்படுத்துவதற்காகத் தமிழ் மக்கள் பேரவையானது புலமையாளர்கள், துறைசார் வல்லுநர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், புலம்பெயர் தேசத்து வல்லுநர்கள் போன்றோரைக் கொண்ட குழுவொன்றை அமைத்து நீண்ட கலந்துரையாடல்களின் பயனாக எமக்கான தீர்வுத் திட்ட வரைபொன்றைத் தயாரித்து நிலத்திலும் தமிழகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் வாழும் மக்களின் அபிப்பிராயங்களையும் உள்வாங்கி அதனை மெருகேற்றி தீர்வுத் திட்ட வரைபு ஒன்றினை வெளியிட்டிருந்தது. தமிழருக்கென அனைத்துத் தரப்பினரதும் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட முதலாவது தீர்வுத்திட்டம் இதுவென அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இந்தத் தீர்வுத்திட்ட வரைபின் அடிப்படைகளை ஏற்று இதய சுத்தியுடன் செயற்படக் கூடியவர்களை எமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்வோம்.
4. நீதியானதும் நேர்மையானதுமான தேர்தல் நடைபெற அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமாகின்றது. எனவே இதற்காக உங்கள் அனைவரினதும் பூரண பங்களிப்பினை கோரி நிற்கின்றோம்.
5. தேர்தலில் தெரிவாகும் எமது பிரதிநிதிகளை சரியான பாதையில் நெறிப்படுத்தி வழிப்படுத்தும் பாரிய பொறுப்பு பொதுமக்களாகிய எமக்கு இருக்கிறது. இதற்கான திட்டமிடலிலும் முயற்சிகளிலும் கைகோர்ப்போம். தவறானவர்களைத் தெரிவு செய்துவிட்டு தூர விலகி நின்று குற்றம் குறைகளை மட்டும் கண்டு பிடித்து விமர்சித்து பொழுதைக் கழிப்பது ஆரோக்கியமான அணுகுமுறையாக அமையாது.

எனவே வாக்களிப்பதுடன் எமது கடமைகள் முடிந்து விட்டன எனக் கருதாது தொடர் பங்களிப்புகளுக்கு ஆயத்தமாவோம் என்றுள்ளது. (ஞா)

## பெர...

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 2ஆம் திகதி முதல் கடந்த 17ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பதிவான தேர்தல் வன்முறைகள் பற்றிய விபரத்தை, தேர்தல் வன்முறைகளை கண்காணிப் பதற்கான நிலையம் வெளியிட்ட அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. (ஞா)

## தமிழர்கள் விரும்...

கில் வாக்குகளை அள்ளி வழங்கிய தமிழ் மக்களை நான் மறக்கவே மாட்டேன். அவர்களுக்கு எப்போதும் 24


தன நிதானய
திகதி - 2020.07.19
சீட்டிழுப்பு இலக்கம் - 292
M 02 28 56 72

மஹஜன சம்பத
திகதி 2020/07/19
சீட்டிழுப்பு இலக்கம் 4188
Z 5 6 6 3 7 9

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 19-07-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2483
R 63 70 72 80

மெகா பவர்
திகதி 19/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 555
D 20 49 61 73 79

சேவன
திகதி 19/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 279
E 26 33 62 68

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 985
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2020.07.19
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,303,235/-
36 44 53 64 W

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1178
சீட்டிழுப்பு திகதி 19.07.2020 ஞாயிற்றுக்கிழமை
A 02 09 10 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,654,860

ராசி
வெற்றி வாரம் 2866 வர்ணம் ஊதா திகதி 19.07.2020
வெற்றி இலக்கங்கள் 05 29 40 46 இடபம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,968,362
Web: www.dlb.lk

ஜய
600 மஞ்சள் 19.07 2020
T 16 45 67 78
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,906,120
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## தமிழர்கள் விரும்..

நன்றியுடையவனாகவே நான் இருப்பேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் அக்கட்சியின் முதன்மை வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாம் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்கள் விரும்புகின்ற அரசியல் தீர்வை வழங்கியே தீருவோம். தமிழர்கள் தமிழீழத்தைக் கோரவில்லை. நாட்டைப் பிரித்துத் தருமாறு கேட்கவில்லை. பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் அதியுச்ச அதிகாரப் பகிர்வையே கேட்கின்றார்கள்.

எனவே, எமது ஆட்சியில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவோம். புதிய அரசமைப்பின் ஊடாக அதியுச்ச அதிகாரப் பகிர்வுடன் தமிழர்களுக்கான தீர்வை வழங்குவோம்.

அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான தீர்வை சமஷ்டித் தீர்வு என்றும், அது தனிநாட்டுக்கு வழிவகுக்கும் என்றும் ராஜபக்ச அணியினர் கூறுவது வேடிக்கையானது.

அரசமைப்புப் பற்றி விளக்கம் இல்லாமல் அவர்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள். ராஜபக்சக்களின் ஆட்சியில் ஒருபோதும் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்காது. அவர்களை நம்பிப் பயனில்லை.

எனவே, நாம் ஆட்சிக்கு வந்தால் தமிழர்களுக்கு அவர்கள் விரும்பும் தீர்வை வழங்கியே தீருவோம். ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றியடையாவிட்டாலும் எனக்கு இலட்சக்கணக்கில் வாக்குகளை அள்ளி வழங்கிய தமிழ் மக்களை நான் மறக்கவே மாட்டேன். அவர்களுக்கு எப்போதும் நன்றியுடையவனாகவே நான் இருப்பேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

தமிழ் மக்களின் விடியலை நோக்கிய பயணம்



நம் எதிர்கால தலைமுறையின்
நிலையான அபிவிருத்தியை
கருத்திற் கொண்டு
உரிய முறையில் வாக்குகளைப்
பயன்படுத்துவோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி
யாழ். மாவட்டம்
தம்பித்துரை ரஜீவ்
X 7
பாராளுமன்றத் தேர்தல் - 2020
(041)

காப்புக்கருவிகள் மற்றும் சாதனங்கள்



3PLY Mask- 25/- 5PLY KN95 Mask- 275/- Child KN95 Mask- 360/-

| Hand Sanitizer Gel,Liquid | High Quality Hand Wash | Disinfectant Liquid |
|---|---|---|
| 50ml. 165/- | 200ml. 175/- | 1Litter.750/- |
| 100ml. 265/- | 500ml. 245/- | 3Litter.2200/- |
| 200ml. 375/- | 1Litter. 350/- | 5Litter.3600/- |
| 500ml. 485/- | 4Litter. 1100/- | condition apply |
| 5Litter. 3950/- | | |

NORTH LEAD DISTRIBUTORS
#253, Stanly Road, Jaffna
அழையுங்கள்
0774192275
0772533390
(C-9923)

சமையல் ஆள் தேவை

யாழ். நகரில் இயங்கும் உணவகம்
ஒன்றுக்கு சமையல் வேலையில்
ஆர்வம் உள்ளவர்கள்
ஆண் / பெண் தேவை.
(C-9922)
தொடர்பு
077 817 7817

CHEMISTRY
KaSubeesan
A/L மாணவர்களுக்கான
மாபெரும் கருத்தரங்கு
வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்.
ஜீலை 26 (ஞாயிறு) 27 (திங்கள்)

- 800 நாட்களுக்கு மேற்பட்ட பாட அலகுகளை வெறும் 8 நாட்களில் கற்கும் வாய்ப்பு
- அலகு ரீதியான துரித மீட்டல்
  - Inorganic - 2 Days
  - Organic - 2 Days
  - Physical - 2 Days
  - General - 2 Days

அனுமதிக்கட்டணம் 1000/=

ஒவ்வொரு அலகிலும் 250MCQ. இறுதி 3 வருட Part ii வினாக்கள் கற்றுத் தரப்படும்

- அனைத்து மாணவர்களும் 80 புள்ளிகளுக்கு மேற்பட்ட பாடப்பரப்பினை 8 நாட்களில் கற்றுக்கொள்ள ஒரு அரிய வாய்ப்பு
- ஆர்வம் உடைய மாணவர்கள் 'A' சித்தி பெற்றுக் கொள்ள உறுதுணையாக இருக்கும்

(3340)
அனுமதிகள் ஜீலை 18 லிருந்து 23 வரை ஏற்றுக்கொள்ளப்படும்
077 430 7829 / 075 566 3375

யாழ் - கிளிநொச்சி மாவட்டம்



"இரண்டு தேசங்கள் ஒரு நாடு"
2 10
ஈழத் தமிழரின் உரிமைக் குரலை ஆதரிப்போம்!
கனகரட்ணம்
சுகாஷ்
(சட்டத்தரணி)
விருப்பு இல
1



X 1 2 10
(C-069)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
(அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்)
தாயகம் - தேசியம் - சுயநிர்ணய உரிமை

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
ராஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: ராஜ் - 077 679 6623
(3359)

பதவி வெற்றிடங்கள்
எமது கிளைகளுக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களிலிருந்து சர்வதேச கம்பனியில் பணிபுரிய ஆட்கள் தேவை.
• வயதெல்லை 18 – 28 • அனுபவம் அவசியமற்றது
• Supervisor, Administration, Asst. Manager
(3363)
தொடர்புகளுக்கு : 077 934 6224

மீண்டும்
வெளிநாடுகளுக்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை
அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த
எமது சேவை மீண்டும் வழமைபோல்
அனைத்து நாடுகளுக்கும்
100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
(C-9912)
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

AMC ACADAMY
Clock Tower Road, Jaffna
A/L கணக்கீடு - 2020
பிரிவு I காலை 6.00 - 7.30
பிரிவு II காலை 7.30 - 9.00
பிரிவு III மாலை 6.00 - 7.30
(3357)
2020 English Medium Classes Available
By : A. KALAICHELVAN
077 694 4543

இலங்கை விசா நீடிப்பு
வெளிநாட்டிலிருந்து இலங்கை வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
VISA EXTENSION (விசா நீடிப்பு)
FOR FOREIGN PASSPORT
எமது கிளைகள்
யாழ்ப்பாணம் கிளிநொச்சி
நெல்லியடி கொடிகாமம்
புதுக்குடியிருப்பு சுன்னாகம்
மருதங்கேணி பருத்தித்துறை
சாவகச்சேரி திருகோணமலை
மானிப்பாய் வல்வெட்டித்துறை
(C-9624)
V2 TRAVELS 0768227499

AMC ACADAMY
Clock Tower Road, Jaffna
Gr.7 English Medium Group Class
Only the Limited
Admission is Available
(3358)
T.P : 077 694 4543

வேலையாட்கள் தேவை
யாழ். திருநெல்வேலியில் உள்ள
எமது கட்டடத்திற்கு
மேசன் மற்றும் Tile பதிப்பவர்
நாட்சம்பள அடிப்படையில் தேவை.
(3353)
தொடர்பு :077 105 6694

கணிதபாட வகுப்பு
தரம் 6 தொடக்கம் தரம் 10 வரையான
மாணவர்களுக்கு கணித பாடம்
வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
பாடத்தில் பின் தங்கியவர்களுக்கு
விசேட கவனம் செலுத்தப்படும்.
(3362)
தொடர்பு :077 033 1156

MATHS GROUP CLASSES
(HOME VISITED)
Contact the Maths group
classes for grade 6 and grade 9
only for two classes permission
is to be granted.
(தமிழ் மொழி மூலமான
மாணவர்களும் தொடர்பு கொள்ளவும்.)
(3361)
077 454 0529

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.